வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 05.07.2022 செவ்வாய்க்கிழமை இதழ் : 211 பக்கங்கள் : 16




## தண்ணீர் வாளிக்குள் விழுந்து குழந்தை பலி!

### பொன்னாலையில் துயரம்

யாழ்ப்பாணம், ஜூலை 05

தண்ணீர் வாளிக்குள் தவறி விழுந்து ஒன்றரை வயது பெண்குழந்தை ஒன்று உயிரிழந்தது.


இந்தச் சம்பவம் பொன்னாலையில் நேற்றுப் பகல் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த யசோதரன் யஸ்மிகா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

15

## இலங்கையை பிச்சைக்கார நாடாக மாற்றிய பெருமை இந்த அரசுக்கே!

### யாழ். மறைமாவட்ட ஆயர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை05

நாட்டைப் பிச்சைக்கார நாடாக மாற்றிய பெருமை தற்போதைய ஆட்சியாளர்களையே சேரும் என யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேர்ணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்தார்

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

15

## ரயிலுடன் மோதி குடும்பஸ்தர் பலி!

வவுனியா, ஜூலை 05

தொடருந்துடன் மோதுண்டு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று வவுனியா செட்டிக்குளத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்றது.

கொழும்பில் இருந்து தலைமன்னார் நோக்கிச் சென்ற தொடருந்துடனேயே இந்த விபத்து இடம் பெற்றது.

15

### சர்வகட்சி அரசு அமைக்க பேச்சு

# விக்னேஸ்வரன், மைத்திரிபால சஜித்தின் அழைப்பை ஏற்றனர்!



கொழும்பு, ஜூலை 05

சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பாக நேற்று எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற பேச்சில் விக்னேஸ்வரன், மைத்திரிபால சிறிசேன ஆகியோர் பங்கேற்றனர்.

வீழ்ச்சியடைந்த நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான "தேசிய மறுசீரமைப்பு மற்றும் அடுத்தகட்ட பயணம்" என்ற தொனிப் பொருளில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்துக்கு பல தரப்பினருக்கும் ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு விடுத்திருந்தது.

இந்த அழைப்பை ஏற்று, வடக்கு, கிழக்கை சேர்ந்த பாராளுமன்ற உறுப்புரிமை கொண்ட கட்சிகள் சார்பில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான

15

## சர்வகட்சி அரசே உடனடித் தேவை!

### சபையில் எம்.பிக்கள் கூட்டாக வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 05

"மகாநாயக்க தேரர்களின் கோரிக்கையை ஏற்று சர்வகட்சி அரசு அமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்."

- இவ்வாறு பாராளுமன்றத்தில் நேற்று வலியுறுத்தப்பட்டது.

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது.

15

## உலக குத்துச்சண்டை போட்டி; வவுனியா மாணவிக்கு தங்கம்!



கொழும்பு, ஜூலை 05

பாகிஸ்தானில் நடந்த 3ஆவது சவாட் (savate) சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் வடக்கைச் சேர்ந்த கந்தசாமி டிலக்சினி தங்கப் பதக்கம் வென்றார்.

இந்தப் போட்டியில் இலங்கை சார்பில் 13 பேர் பங்கேற்றனர். இதில், 9பேர் தங்கப் பதக்கங்களையும் 4பேர் வெள்ளிப் பதக்கங்களையும் வென்றனர்.

15

## யாழ். நகரில் இன்று பெற்றோல் விநியோகம்!

யாழ்ப்பாணம்,ஜூலை 05

யாழ். நகரிலுள்ள லங்கா ஐ. ஓ. சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் (யாழ். மாவட்ட செயலகம் அருகே) இன்று செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணியிலிருந்து பெற்றோல் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இறுதியாக ஒரு கிழமைக்குள் பெற்றோல் பெற்றவர்களுக்கு எரிபொருள் வழங்கப்படாது. வாகன இலக்கம் இராணுவத்தினர் வைத்துள்ள செயலி மூலமாக பரிசோதிக்கப்பட்ட பின்னரே பெற்றோல் வழங்கப்படும்.

மேலும்,

15

## எதிர்பாராத திருப்பங்கள் 9ஆம் திகதி ஏற்படலாம்!

### தென்னிலங்கை தரப்புகள் கட்டியம்!

கொழும்பு, ஜூலை 05

எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை நாட்டின் அரசியலில் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம் என்று தென்னிலங்கை தரப்புக்கள் தெரிவிக்கின்றன.

மேலும், ஒரு சில நாட்களில் புதிய நிதி அமைச்சர் ஒருவரை நியமிப்பது குறித்து ஜனாதிபதி திட்டமிட்டு வருகிறார். அநேகமாக 9ஆம் திகதி புதிய நிதி அமைச்சர் பதவியேற்கக்கூடும்.

இதேநேரம், அன்றைய தினம் ரணில்

15

## மக்கள் அச்சமடைய வேண்டாம்! பாதுகாப்பு அமைச்சு அறிக்கை!!

கொழும்பு, ஜூலை 05

இன்று அல்லது நாளை பயங்கரவாத தாக்குதல் ஒன்று நடத்தப்படலாம் என்று வெளியான தகவல்கள் குறித்து மக்கள் அச்சமடையத் தேவையில்லை. தங்கள் நாளாந்த நடவடிக்கைகளை வழமைபோன்று மேற்கொள்ளலாம் என்று பாதுகாப்பு அமைச்சு அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

கரும்புலிகள் தினத்தை நினைவு

15

## சாதாரண தரப் பரீட்சை 1 மாதம் தாமதமாகலாம்

கொழும்பு, ஜூலை 05

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையை ஒரு மாதத்துக்கு பிற்போடும் நிலை ஏற்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் சுசில் பிறேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையை ஒரு மாதத்துக்கு பிற்போடும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும் இதனால் குறித்த பரீட்சை ஒரு மாதம் தாமதமாகலாம் என்றும் அவர் கூறினார். (அ)

## கரும்புலிகள் நாளில் தாக்குதல்? உண்மையை வெளிப்படுத்துக!

### சபையில் நளின் எம். பி. வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 05

தமிழீழ விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு இன்று அல்லது நாளை - 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் வடக்கு, கிழக்கு அல்லது தென் பகுதிகளில், வெளிநாட்டு உளவு சேவைகளின் பங்களிப்புடன் தாக்குதல்கள் நடத்தப்படக்கூடும் என்று வெளியான தகவல் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார சபையில் நேற்று கேள்விகளை எழுப்பினார்.

இந்த தாக்குதல்களை தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டதாக கூறுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன என்று பாதுகாப்பு செயலாளர் கமல் குணரட்ண உறுதி செய்த கடிதம் ஒன்றின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால், வடக்கு - கிழக்கில் பணியாற்றும் வெளிநாடுகளின் அலுவலர்கள் குறித்த தினங்களில் பொது

15

## இப்படியும் நடக்கிறது...!

நேற்றுக் காலை இலங்கையின் ஒரு முக்கிய நிறுவனம் ஒன்றின் தலைவரை சந்தித்து ஒரு தேவை குறித்து பேசுவதற்காக சென்றிருந்தோம்.

அந்த நிறுவனத் தலைவர் இந்த ஊர்க்குருவிக்கு அறிமுகமானவர். ஊர்க்குருவியின் நண்பர் ஒருவருக்கு அந்த நிறுவனத்திடமிருந்து ஒரு தேவை இருந்தது. அதனால் அவருக்காக அந்த நிறுவனத் தலைவரிடம் சந்திப்புக்கு ஏற்பாடு செய்துவிட்டு நண்பருடன் அவரைச் சந்திக்க சென்றிருந்தோம்.

தனது தேவை குறித்து அவர், மிகப்பெரிய ஆவணம் ஒன்றை தயாரித்து எடுத்து வந்திருந்தார். குறித்த நிறுவனத் தலைவரைச் சந்தித்து அவரின் தேவை குறித்து பேசிவிட்டு, அது தொடர்பாக அவர் தயராகக் கொண்டு வந்திருந்த கோவையை கொடுத்ததும் அதனைத் திறந்து ஒவ்வொரு பக்கமாக பார்த்துச் சென்றவர், கடைசியில் முழுவதையும் படிக்காமலே கடைசிப் பக்கத்திற்கு சென்றார். அங்கேதான் அவர் தனது தேவை என்ன என்பதை குறித்து எழுதியிருந்தார்.

அதாவது ஒரு தேவை குறித்து கேட்கின்றபோது, அதனைக் கேட்பவர் யார், அவர் என்ன செய்துகொண்டிருக்கிறார், இப்போது அவருக்கு என்ன தேவையிருக்கின்றது, அந்தத் தேவை கிடைத்தால் எப்படியெல்லாம் செய்யலாம் என்பவை எல்லாவற்றையும் மிக நேர்த்தியாகத் தயாரித்துவிட்டு, கடைசியில் தனது தேவையை எழுதியிருந்தார் நண்பர்.

அதனால்தான் அந்த நிறுவனத் தலைவர், கடைசியில் இவர் என்ன கேட்கின்றார் என்பதை அறிய, கடைசிப் பக்கத்தைத் திறந்து பார்த்தார்.

இந்த சந்திப்பு முடித்துக்கொண்டு அலுவலகத்திற்கு வந்திருந்தபோது, ஒரு நண்பரிடமிருந்து வட்ஸ்அப்பில் ஒரு செய்திக்கான இணைப்பு வந்திருந்தது.

கிளிக் பண்ணிப் பார்த்தபோதுதான் அது நமது ஆறு கட்சித் தவைர்கள் சர்வதேச நாணய நிதியத்திற்கு எழுதிய கடிதம் ஒன்று பற்றிய செய்தியின் இணைப்பு அது.

சர்வதேச நாணய நிதியத்திடம் ஆறு தமிழ் தேசியக் கட்சிகள் கூட்டாகக் கோரிக்கை என்ற தலைப்புடன் வெளிவந்த அந்தச் செய்தியை கொஞ்சம் படித்துக் கொண்டிருந்துவிட்டு, கடைசியில் அவர்கள் சர்வதேச நாணய நிதியத்திடம் என்னதான் கேட்கிறார்கள் என்பதை அறிய கடைசிப் பந்தியைப் படித்தேன்.

இலங்கையின் இக்கட்டான நேரத்தில் உதவி செய்யத் தயாராக உள்ள அனைத்து பங்குதாரர்களுடனும் ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களான நாங்கள், கலந்துரையாடலில் ஈடுபடத் தயாராக உள்ளோம் என்பதே கடிதத்தின் கடைசி வாக்கியம்.

இலங்கைக்கு உதவி செய்யத் தயாராக இருக்கும் பங்குதாரர்களுடன் இவர்கள் என்னத்தைத்தான் கலந்துரையாடப் போகிறார்கள் என்பது புரியவில்லை.

அட, ஆகக்குறைந்தது இலங்கைக்கு உதவி செய்யக் கூடியவர்களுடன் கலந்துரையாடத் தயாராக இருக்கின்றோம் என்றாலும் பொறுத்தக்கொள்ளலாம். ஆனால், அவர்கள் யாருடன் பேசத் தயாராக இருக்கின்றார்கள் என்றால், உதவி செய்யத் தயாராக உள்ள அனைவருடனும்.

உதவி செய்யத் தயாராகிவிட்ட பின்னர் இவர்களுடன் பேசுவதற்கு என்ன இருக்கின்றது? அல்லது தங்களுடன் பேசிய பின்னர்தான் உதவி செய்யவேண்டும் என்று சொல்ல வருகின்றார்களா?

இந்தச் செய்தி வெளியாகிய இணையத்தளத்தின் இணைப்பை அனுப்பியிருந்தவர் லண்டனிலுள்ள புலம்பெயர் நண்பர் ஒருவர்தான். அவர் அந்த ஆறு கட்சித் தலைவர்களின் கடிதத்திலுள்ள மற்றுமொரு விடயத்தையும் தனியாக எனக்கு குறுந்தகவலில் தெரிவித்திருந்தார்.

அவர்களின் கடிதத்திலுள்ள மற்றுமொரு வசனம் இது.

“புலம்பெயர் தமிழர்களின் நம்பிக்கையை இலங்கை அரசாங்கம் பெற முடிந்தால், அது நலிந்துபோன இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவதில் ஆக்கப்பூர்வமான பங்களிப்பிற்கு வழிவகுக்கும்.”

இந்த வசனத்தை அனுப்பியிருந்த அந்த நண்பர், முதலில் இந்தத் தலைவர்கள் ஆறு பேரும் புலம்பெயர் தமிழர்களின் நம்பிக்கையைப் பெறவேண்டும் என்று குறிப்பிட்டிருந்ததையும் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.!

**- ஊர்க்குருவி**

# தமக்கு எரிபொருள் வழங்குமாறு சமுர்த்தி ஊழியர்கள் கோரிக்கை

*கிளிநொச்சி, ஜூலை 05*

தமக்கு எரிபொருள் பெற்று தருமாறு கிளிநொச்சி மாவட்டத்தில் பணி புரியும் கிராம சேவையாளர்கள் ஒன்றிணைந்து நேற்று கோரிக்கை ஒன்றை விடுத்தனர்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருடன் கிராம சேவையாளர்கள் கலந்துரையாடல் நேற்று கச்சேரியில் நடைபெற்றது.

இதில், பொருளாதார நெருக்கடியின் மத்தியில் பொது மக்களுக்கான சேவையை உரிய நேரத்தில் வழங்க முடியாத நிலை காணப்படுகிறது. பொதுமக்களுக்கான சேவையை உரிய முறையில் முன்னெடுக்க எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியாது உள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர்.

அத்தியாவசிய சேவையில் ஈடுபடுவோருக்கு வழங்கப்படும் எரிபொருள் பங்கீடு போன்று, கிராம மட்டத்தில் மக்களுக்கான சேவையை உரிய காலப்பகுதியில் முன்னெடுக்க தமக்கான எரிபொருளை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரினர்.

இதன்போது, பதிலளித்த அரசாங்க அதிபர், இவ்வாறான பிரச்னைக்கு முகம் கொடுக்கின்றீர்கள் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால், இதுவரையில் பொது நிர்வாக அமைச்சின் கீழ் உள்ள உத்தியோகத்தர்கள், அத்தியாவசிய சேவைக்குள் உள்வாங்கப்பட்டார்களா என்ற விடயம் நேற்றுவரை இருக்கவில்லை. ஆனால், ஜனாதிபதி வெளியிட்டுள்ள விசேட அறிவிப்பின் பிரகாரம் நாங்களும் அதற்குள் உள்வாங்கப்படுவதாக நம்புகின்றேன். அது மாத்திரமல்லாது, வேலையை கொண்டு செல்வதற்கு எரிபொருள் என்பது அடிப்படையான விடயமாகும்.

ஆனால், மாவட்டத்தில் பெற்றோல் என்பது மிகக் குறைந்த அளவில்தான் இருக்கின்றது. இதேவேளை அருகில் உள்ள தனியார் எரி பொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றைய தினத்தைவிட மிக குறைந்தளவாக பெற்றோல் உள்ளது. அதேவேளை கடந்த வாரம் சுகாதார துறையினருக் காக எரிபொருள் கிடைத்திருந்தது. அவ்வாறு வந்த எரிபொரு ளில் மிகுதி இருந்தால் நீங்கள் எதிர்பார்ப்பது போன்றில்லாது, ஒரு லீற்றராக தந்து ஆரம்பித்து விடலாம். அவ்வாறு பெற முடிந்தால் பெற்று தர முடியும் - என்று அரச அதிபர் கூறினார். (ஐ-2)

# மசாலா பொருட்களின் விலை ஆயிரக்கணக்கில் எகிறியது!

*கொழும்பு, ஜூலை 05*

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக பொதுமக்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

தினம் தினம் விலைவாசி அதிகரிப்பை எதிர்நோக்கும் மக்கள் கடும் அதிருப்தி நிலையை அடைந்துள்ளனர்.

மசாலாப் பொருட்களின் விலையும் அதிகரித்ததுஇந்த நிலையில் தற்போது சமையலுக்குப் பயன்படுத்தப்படும் மசாலாப் பொருட்களின் விலைகளும் சந்தையில் கடுமையாக உயர்ந்துள்ளன.

கறுவா, மிளகு மற்றும் கிராம்பு ஆகியவற்றின் விலைகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, ஏற்றுமதி மட்டத்தில் உள்ள ஒரு கிலோ இலவங்கப்பட்டையின் விலை 5000 ரூபாவாகவும், ஒரு கிலோ மிளகு 1300 ரூபாவாகவும், கராம்பு கிலோ ஒன்றின் விலை 2400 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது. (அ)

## ஆடித் திருவிழா!

*வடமராட்சி, ஜூலை 05*

வடமராட்சி கிழக்கு பிரதேசத்திலுள்ள கத்தோலிக்க யாத்திரைத் தலமான புல்லாவெளி புனித செபஸ்தியார் தேவாலய ஆடித் திருவிழா நாளை மறுதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

10 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை திருவிழா திருப்பலியுடன் உற்சவம் நிறைவடையும். உற்சவத்தை ஒட்டி தேவாலய வளாகத்தை துப்புரவு செய்து பக்தர்களுக்கு குடி தண்ணீர் வசதிகளை வழங்க பருத்தித்துறை பிரதேச சபை நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. (ஐ- 2)

# ராஜபக்ஷ குடும்பம் ஒதுங்க வேண்டும்!

## சம்பிக்க வலியுறுத்து

*கொழும்பு, ஜூலை 05*

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகாவிட்டால் நாட்டில் நெருக்கடி நிலை அதிகரிக்கும் என்று 43 ஆம் படையணியின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அத்துடன், நாமல் ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷ குடும்பம் அரசியலில் இருந்து ஒதுங்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

ராஜபக்ஷ தரப்புக்கு தற்போது 69 லட்சம் பேரின் ஆதரவு இல்லை. 3 வீதமான மக்கள்கூட அவர்களுடன் இல்லை. எனவே, ஜனாதிபதி பதவி விலக வேண்டும். அவ்வாறு அவர் பதவி விலகி 24 மணிநேரத்துக்குள் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யும் வாய்ப்பை பாராளுமன்றத்துக்கு வழங்கவேண்டும் எனவும் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டார்.

அத்துடன், அனைத்து எதிரணிகளும் இதற்காக ஓரணியில் திரள வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்தார். (அ)

## அலங்காரத் திருவிழா!

*வடமராட்சி, ஜூலை 05*

யாழ்ப்பாணம் கோட்டை ஸ்ரீ முனீஸ்வர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவப் பெருவிழா கடந்த வியாழக்கிழமை விசேட பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 28 தினங்கள் இடம்பெறும் இந்த அலங்கார உற்சவத்தில், எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சப்பை ரதத் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை 1008 சங்காபிஷேகமும் மாலை 5.30 மணிக்கு இரத பலியும் அடுத்த நாளான 25 ஆம் திகதி திங்கட் கிழமை பகல் 10 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம் பெறும். (ஐ-2)

# யாழ் சர்வதேச விமான நிலையத்தில் சிற்றுண்டிச்சாலை திறக்கப்பட்டது!

*யாழ்ப்பாணம், ஜூலை 05*

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் இராணுவ சிற்றுண்டிச்சாலை திறக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக பயணங்களை மேற்கொள்ளும் உள்ளூர் மற்றும் வெளியூர் பயணிகள், அங்கு பணியாற்றும் உத்தியோகத்தர்கள் பயன்படுத்தும் வகையில் விமான நிலையத்தின் சூழலில் இலங்கை இராணுவத்தின் 7 ஆவது பெண்கள் படையணியினால் புதிதாக அமைக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலை யாழ்.பாதுகாப்புப் படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விஜேசுந்தரவின் தலைமையில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இதன் மூலமாக விமான நிலையப் பணியாளர்கள் மற்றும் பயணிகளுக்கு தூய்மையான சுகாதார பாதுகாப்பு கொண்ட உண வுகள் மற்றும் பானங்களை சாதாரண விலையில் பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவிக் கப்பட்டது. (அ)

ஈழநாடு
Eelanadu
05.07.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஆணி 21

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ஜனாதிபதியின் பதவி விலகல் - எப்போது?

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பதவி விலக வேண்டுமென்று தொடர்ந்தும் கோரிக்கைகள் வலுவடைந்து வருகின்றன. பௌத்த பீடங்களின் பீடாதிபதிகள் அரசாங்கத்தைக் கலைத்துவிட்டு தேர்தலுக்கு செல்லுமாறு கோரிக்கை விடுத்திருக்கின்றனர். இதுவரை கோட்டா கோ ஹோம் - போராட்டக்காரர்களால் மட்டும் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை, இப்போது அனைவருமே உச்சரிக்கின்றனர். கோட்டாபய ராஜபக்ஷ பதவியில் இருக்கும் வரையில், நாடுகள் உதவி செய்யமாட்டாதென்று, 43ஆவது படையணியின் தலைவர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க கூறுகின்றார்.

தேரர்கள் அமைப்பும் ஜனாதிபதி பதவி விலக வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கின்றது. பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேறியிருக்கும் சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்கள் அணியும் ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலக வேண்டுமென்று வாதிடுகின்றது. சஜித் பிரேமதாஸ தலைமையிலான பிரதான எதிர்க்கட்சியும் தொடர்ந்தும் பதவி விலகலையே வலியுறுத்தி வருகின்றது. ஜனதா விமுக்தி பெரமுனவும் (ஜே. வி. பி) ஜனாதிபதி பதவி விலக வேண்டுமென்று கூறி வருகின்றது. மொத்தத்தில், கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகலையே நாடு எதிர்பார்க்கின்றது. ஆனால், அவரோ, தான் ஒரு தோல்வியடைந்த ஜனாதிபதியாக வெளியேற விரும்பவில்லையென்று கூறிவருகின்றார். ஆனால், இப்போதே அவர் ஒரு தோல்வியடைந்த ஜனாதிபதிதான்.

தன்னையொரு சிங்கள - பௌத்த தலைவனென்று பிரகடனம் செய்தவரை, பதவியிலிருந்து வெளியேறுமாறு பலரும் கோரி வருகின்றனர். இதில் அநேகர் ஒருகாலகட்டத்தில் அவருக்கு ஆதரவு வழங்கியவர்கள். இலங்கையின் எந்தவொரு ஜனாதிபதியும் எதிர்கொள்ளாத நெருக்கடியை கோட்டாபய ராஜபக்ஷ எதிர்கொண்டு வருகின்றார். கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி தொடர்பில் சர்வதேச சமூகம் - குறிப்பாக இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் எவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றன என்பதை அறிய முடியாது - ஏனெனில், எந்தவொரு நாடும் இவ்வாறான உள்ளக விடயங்களில் அபிப்பிராயங்களை வெளியிடாது. ஆனால், ராஜபக்ஷக்களின் திரைமறைவு தலையீடுகள் தொடர்பில் அவர்கள் நிச்சயம் கவனம் கொள்வார்கள்.

ஏனெனில், தங்களால் வழங்கப்படும் உதவிகள் மற்றும் கடன்கள் சரியாகப் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதில் அவர்கள் அக்கறைப் படாமல் இருக்க முடியாது. அந்த வகையில், கோட்டாபய ராஜபக்ஷ பதவியில் இருக்கும் வரையில், அவரின் குடும்பத்தினர் ஏதோவொரு வகையில் கொழும்பின் அரசியலில் தலையீடு செய்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. இந்தத் தலையீடுகளை இல்லாமல் செய்ய வேண்டுமாயின், கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினால் மட்டுமே இது சாத்தியப்படும். ஆனால், அவர் பதவி விலகாவிட்டால் என்ன செய்வது? இந்தப் பிரச்னையோடு இன்னும் எவ்வளவு காலம் நாடு இழுபட்டுச் செல்லப் போகின்றது? நாட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு சிந்தித்தால், பதவி விலகுவதை தவிர, ஜனாதிபதிக்கு வேறு தெரிவுகள் எதுவும் இல்லைபோன்றே தெரிகின்றது. ஆனால், அவர் பதவி விலக மறுத்தால், அடுத்த கட்டமாக, தென்னிலங்கை அரசியல் சமூகம் என்ன செய்யப் போகின்றது? பௌத்த மதபீடங்கள் என்ன செய்யப் போகின்றன? ஏனெனில், உடனடியாக தேர்தலுக்கு செல்வதற்கான நிலைமையில்லை.

தேர்தலை நடத்த வேண்டுமாயின், ஆகக்குறைந்தது ஆறு மாதத்துக்காவது, நிலைமைகள் சுமுகமாக இருக்க வேண்டும். மக்கள் முன்னைய வாழ்க்கை முறைக்கு செல்ல வேண்டும். மக்கள் சுமுகமாக வாழக் கூடிய நிலைமையிருந்தால் மட்டும்தான், அவர்கள் தேர்தலில் ஆர்வம் காட்டுவார்கள். ஆனால், அவ்வாறானதொரு சுமுக நிலைமையை ஏற்படுத்த வேண்டுமாயின், முதலில் பிரச்னைகள் கணிசமாகத் தீர்க்கப்பட வேண்டும். ஆனால், பிரச்னையே ஜனாதிபதியின் பதவியாக இருந்தால், பின்னர் எவ்வாறு ஆறு மாதத்துக்குள் சுமுகமான நிலைமையை ஏற்படுத்த முடியும்?

விடயங்கள் மிகவும் சிக்கலானதாகவே தெரிகின்றது. எந்தக் கோணத்தில் சிந்தித்தாலும், அனைத்து பக்கங்களிலும் ராஜபக்ஷக்களே தெரிகின்றார்கள். ராஜபக்ஷக்கள் முழுமையாக ஒதுங்கினால் மட்டும்தான் நிலைமையில் குறிப்பிடத்தகு மாற்றங்களை காண முடியும்?

# பலமடைந்து வரும் ‘கோட்டாவே போய் விடு’ கோஷம்!

**அலசுவது இராஜதந்திரி**

இலங்கை அரசியலில் பௌத்த மகா சங்கத்தினரின் செல்வாக்கு குறிப்பிடத்தக்கதாகும். கடந்த மே மாதம் முதல் படிப்படியாக வலுவடைந்து வருகின்ற ஜனாதிபதி கோட்டாபய அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் தற்போது உச்சத்தைத் தொட்டுள்ளது என்பதைக் குறிப்பதாகவே பௌத்த மகா சங்கத்தினரின் எச்சரிக்கை காணப்படுகின்றது.

பௌத்த மகா சங்கத்தினரின் தேரர்கள் அமைப்பு மிகக்கடுமையான எச்சரிக்கையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு விடுத்துள்ளது. இந்தக் கோரிக்கையில் இம்மாதம் 7ஆம் திகதிக்குள் தமது பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ இராஜிநாமா செய்ய வேண்டும் எனவும் இல்லையேல் நாட்டிலுள்ள அனைத்து பௌத்த குருமார்களையும் ஒன்று திரட்டி ஜனாதிபதி ராஜபக்ஷவை பதவியிறக்கம் செய்யும் நடவடிக்கைள் விரிவுபடுத்தப்படும் என்றும் தேரர்கள் அமைப்பு எச்சரித்துள்ளது. பதினொரு பௌத்த குருமார்களின் ஒப்பங்களோடு வெளியாகியுள்ள குறிப்பிட்ட எச்சரிக்கையில் இம்மாதம் 7ஆம் திகதிக்குள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகாவிட்டால் அனைத்து தேரர்களையும் கொழும்புக்கு வரவழைத்து ஜனாதிபதியை பதவியிறக்கம் செய்யும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படுமெனவும் தேரர்கள் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

தலைநகர் கொழும்பு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் வாகன நடமாட்டங்கள் முற்றிலுமாக முடங்கி ஏறத்தாழ ஊரடங்கு வேளைகளில் காணப்படும் ஒரு சூழ்நிலை நிலவுவதையே அவதானிக்க முடிகின்றது.

இத்தகைய பின்னணியில் மகா சங்கத்தினர் விடுத்த எச்சரிக்கையை தொடர்ந்து அடுத்தடுத்து வரும் வாரங்களில் நாட்டில் ஜனாதிபதிக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் மேலும் உத்வேகம் பெறும் என்றே எதிர்பார்க்க முடியும். ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு எதிராக உத்வேகமடையவுள்ள ஆர்ப்பாட்டங்களுக்கு கட்டியம் கூறுவதுபோல நாட்டின் பல பாகங்களிலும் தற்போது வன்முறைகள் சிறிதும் பெரிதுமாக வெளிப்பட ஆரம்பித்துள்ளன.

இந்த வன்முறைகள் விரிவடையும் பட்சத்தில் சில வருடங்களுக்கு முன்னர் “அரபு வசந்தம்” என்ற சுலோகத்தின் கீழ் லிபியா, அல்ஜீரியா, ஈராக் போன்ற நாடுகளில் இடம்பெற்றது போன்ற மோசமான முறையிலான ஆட்சி மாற்றங்கள் இடம்பெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எனவே “அரபு வசந்தம்“ போன்ற ஓர் ஆட்சி மாற்ற அணுகுமுறைக்கு அறைகூவல் விடுப்பது போலவே மகாசங்கத்தினர் இம்மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டுமென்று விடுத்துள்ள கோரிக்கை விளங்குகின்றது.

பத்து வருடங்களுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தபோது நாட்டில் ஒருவருக்கு ஒருவர் பாற்சோறு பரிமாறியும், வீதிகள் தோறும் வெற்றி முழக்கத்தோடு பாடல்களைப் பாடித்திரிந்து தென்னிலங்கையர்கள் வெற்றி முழக்கம் செய்தனர். ஆனால், தற்போது வீட்டில் பாற் சோறோ அல்லது வேறு சமையலோ செய்வதற்கு சமையல் எரிவாயு இன்றியும் அத்தியாவசிய பொருட்களை இடத்துக்கு இடம் கொண்டு சென்று விநியோகிப்பதற்கான வாகன போக்குவரத்துக்குரிய எரிபொருள் வசதிகளின்றியும் மக்கள் அல்லல்படுகின்றனர்.

இன்றைய சூழலில் வெறுமனே நிதி மற்றும் பொருட்கள் பண்டங்களின் உதவிகள் மட்டுமல்ல. இலங்கையின் சிதைந்து போயுள்ள பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதற்கான சிறந்த நிபுணத்துவ ஆலோசனைகளும் நாட்டுக்கு வேண்டியது இன்றியமையாததாகின்றது.

ஏனெனில், ஆட்சிப் பீடத்திலிருப்போருக்கு அறிவுரை கூறுவோராக இருப்போரின் கையாலாகாத்தனமும் தற்போது தெளிவாக வெளிப்பட ஆரம்பித்துள்ளது.


இலங்கையின் சிரேஷ்ட அரசியல்வாதியும் லங்கா சமசமாஜ கட்சி தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண தமது தரப்பு இனி ஒரு போதும் ராஜபக்ஷ தரப்பினருடன் சேரப்போவதில்லை என்று தெரிவித்துள்ளார். அத்துடன், ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த எவரும் இனி ஒருபோதும் ஆட்சிப்பீடத்தில் அமரப்போவதில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண முன்னாள் நிதி அமைச்சரும் ராஜபக்ஷ சகோதரர்களில் ஒருவருமான பஸில் ராஜபக்ஷவை அடிப்படை பொருளாதார அறிவற்ற ஒரு பேர்வழி என்று திட்டித்தீர்த்துள்ளார்.

பஸில் ராஜபக்ஷவை நிதி அமைச்சராக நியமிக்க வேண்டாமெனப் பல தடவைகள் தாம் ஜனாதிபதிக்கு அறிவுரை கூறினாரெனவும் ஆனால், தமது ஆலோசனையை அவர் செவிமடுக்காது விட்டதன் விளைவையே நாட்டு மக்கள் தற்போது அனுபவிக்கின்றனர் என்றும் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

எனவே, நாட்டின் சிரேஷ்ட அரசியல்வாதிகள் குறிப்பாக முன்பு ராஜபக்ஷ சகோதரர்களுக்கு துதிபாடியவர்களே தற்போதைய அரசை திட்டித்தீர்க்க ஆரம்பித்துள்ளனர். இந்தத் தருணத்தில் மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக முன்வைத்துள்ள காலக்கெடு நாட்டு நிலைமையை மேலும் மோசமாக்கும் சூழ்நிலைகளை பலப்படுத்தியுள்ளதென்றே கருதலாம்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
காலையிலேயே நல்ல செய்தி வரும். உங்களுடைய செயல்கள் நினைத்தபடி நடந்தேறும். உறவினர்களிடம் ஏற்பட்ட பிரச்னைகள் தீரும். உங்கள் எண்ணம் ஒன்று நிறைவேறும்.

**இடபம்**
சுறுசுறுப்பாக செயல்பட்டு நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள். யோகமான நாள். அலுவலகத்தில் உங்களின் செல்வாக்கு உயரும். மேலதிகாரிகள் பாராட்டுவர். உங்கள் செயலில் வெற்றி காண்பீர்கள்.

**மிதுனம்**
மகிழ்ச்சியான நாள். தடைபட்ட முயற்சிகள் இன்று நடந்தேறும். அரசு வழியிலான முயற்சிகள் ஆதாயமாகும். துணிச்சலுடன் செயல்பட்டு பிறரால் முடியாத செயலை செய்து முடிப்பீர்கள்.

**கடகம்**
குருவருளால் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். விரும்பியதை அடைவீர்கள். தடைபட்ட வருவாய் வந்து சேரும். சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும். சமூகத்தில் உங்கள் புகழ் உயரும்.

**சிம்மம்**
திட்டமிட்டு செயல்படுவீர்கள். நெருக்கடிகள் விலகி நிதிநிலை உயரும். பணியிடத்தில் உங்களுடைய ஆலோசனைக்கு மதிப்பு ஏற்படும். பாராட்டப்படுவீர்கள். செயல்களில் சாதகமான நிலை உண்டாகும்.

**கன்னி**
அலுவலகம், தொழில் சம்பந்தமாக வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள். அலைச்சல் அதிகரிக்கும், உங்களது முயற்சி லாபமாகும். குடும்பத்தினரின் ஆசையை நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்**
செயல்களால் வருமானம் காண்பீர்கள். நீங்கள் ஈடுபடும் முயற்சி வெற்றியாகும். லாபகரமான முயற்சி ஒன்றில் ஈடுபட்டு, நீங்கள் எண்ணியதை அடைவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**விருட்சிகம்**
வேலை வாய்ப்பிற்காக காத்திருந்தோருக்கு எதிர்பார்த்த நற்செய்தி வரும். வியாபாரத்தில் மேற் கொள்ளும் முயற்சி அனுகூலத்தை ஏற்படுத்தும். நண்பர்களின் உதவியுடன் புதிய தொழில் தொடங்குவீர்கள்

**தனுசு**
கடந்த கால அனுபவத்தைக் கொண்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். தந்தை வழி உறவுகளுடன் மோதல் உண்டாகலாம். வார்த்தைகளில் கோபம் வேண்டாம். விமர்சனத்தை பொருட்படுத்த வேண்டாம்.

**மகரம்**
ஆவலுடன் நீங்கள் மேற்கொண்ட ஒரு முயற்சி இன்று நிறைவேறாமல் போகும். புதிய முயற்சிகளையும் வெளியூர் பயணங்களையும் தவிர்ப்பது நன்மையாகும். நிதானம் தேவை.

**கும்பம்**
நண்பர்களின் ஒத்துழைப்பால் புதிய முயற்சிகள் வெற்றியாகும். பண வரவு கூடும். தம்பதி இடையே ஏற்பட்ட பிரச்னை தீரும். குடும்ப நலனில் அக்கறை கொள்வீர்கள். முயற்சி ஆதாயத்தை உண்டாக்கும்.

**மீனம்**
பணியிடத்தில் ஏற்பட்ட நெருக்கடி விலகும். மறைமுக எதிரிகள் பலமிழந்து போவர். சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். மேலதிகாரிகள் பாராட்டுவர். எதிரிகளால் ஏற்பட்ட பிரச்னைகளை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.

# அ. தி. மு. க. பொதுக் கூட்டம் தடை விதிக்க மன்று மறுப்பு

சென்னை, ஜூலை 05

ஜூலை 11ஆம் திகதி நடைபெறவுள்ள அ. தி. மு. க. பொதுக்குழு விவகாரத்தில் தலையிட முடியாது என உத்தரவிட்ட சென்னை உயர் நீதிமன்றம், நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணையை வரும் 7ஆம் திகதிக்கு தள்ளி வைத்தது.

கடந்த ஜூன் 23ஆம் திகதி சென்னை வானகரத்தில் நடந்த அ. தி. மு. க. பொதுக்குழு கூட்டத்தில் கட்சியின் தலைமை தொடர்பான புதிய முடிவுகள் எடுக்கத் தடை கேட்டும், பொதுக்குழு கூட்டத்துக்கு தடை கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதிகள் “ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் ஆகியோரால் தனிதனியாக கையெழுத்திடப்பட்டு, இறுதி செய்யப்பட்ட 23 தீர்மானங்களை பொதுகுழுவில் முன் வைத்து, அவற்றில் எந்த முடிவையும் எடுக்கலாம். மற்ற விவகாரங்களை ஆலோசிக்கலாமே தவிர முடிவெடுக்கக் கூடாது” என உத்தரவிட்டனர்.

ஆனால், நீதிமன்றத்தில் தெரிவித்த 23 தீர்மானங்களை தவிர, நிரந்தர அவைத் தலைவராக தமிழ்மகன் உசேனை நியமிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

மேலும், அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன் தேர்வு செய்யப்பட்டதே செல்லாது என்பதால், அவர் அறிவித்த அடுத்த பொதுக்குழு கூட்டம் குறித்த அறிவிப்பு செல்லாது. எனவே 11ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுக்குழு கூட்டத்துக்கு தடைவிதிக்க வேண்டுமென கோரி கூடுதல் மனு தாக்கல் செய்யப்பட்டது

நேற்று நடந்த இந்த வழக்கின் விசாரணை முடிவில், “ஜூலை 11ஆம் திகதி பொதுக் குழுவுக்கு தடை விதிக்க வேண்டும் என இந்த மனுவில் கோரிக்கை எழுப்ப முடியாது. ஒப்புதல் அளிக்கப்பட்ட 23 தீர்மானங்கள் தவிர வேறு தீர்மானங்கள் நிறைவேற்றக் கூடாது என பிறப்பித்த இடைக்கால உத்தரவு ஜூன் 23ஆம் திகதி பொதுக்குழுவுக்கு மட்டும் பொருந்தும். அதன்பின்னர் நடக்கும் பொதுக்குழுக்களுக்கு அல்ல என்று விளக்கம் அளித்தனர்.

உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கு, விசாரணைக்கு எடுக்கப்பட்டு விட்டாலோ, இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டாலோ இந்த வழக்கை எப்படி விசாரிக்க முடியும்? என கேள்வி எழுப்பிய நீதிபதிகள், 11ஆம் திகதி பொதுக்குழு கூட்டத்தை பொறுத்தவரை நீதிமன்றம் தலையிட முடியாது. ஜூன் 23ஆம் திகதி நடந்த நிகழ்வுகளை சமர்ப்பிக்க உத்தரவிட்டு, விசாரணையை வரும் 7ஆம் திகதிக்கு தள்ளிவைத்தனர். (ஐ)

# ஈழத் தமிழருக்கும் உதவிப் பொருட்கள் சமமாக கிடைப்பதை உறுதி செய்யுங்கள்

திருவாரூர், ஜூலை 05

இலங்கைக்கு வழங்கப்பட்ட உதவிப் பொருட்கள் அனைத்தும் ஈழத் தமிழர்கள் வாழும் பகுதிக்கும் சமமாக பிரித்துக் கொடுக்கப்படுகின்றனவா என்பதை மத்திய, மாநில அரசுகள் கவனிக்க வேண்டும் என்று கூறியுள்ளார் தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ. நெடுமாறன்.

திருவாரூரில் செய்தியாளர்களை சந்தித்த அவர்,

பொருளாதார நெருக்கடியில் உள்ள இலங்கைக்கு மனிதாபிமான அடிப்படையில் மத்திய, மாநில அரசுகள் உதவிப் பொருட்களை வழங்குவது வரவேற்கத்தக்கது. இதேசமயம், அந்த உதவிப் பொருட்கள் அனைத்தும் ஈழத் தமிழர்கள் வாழும் பகுதிக்கும் சமமாக பிரித்துக் கொடுக்கப்படுகின்றனவா என்பதை உற்று நோக்க வேண்டும்.

உதவிப் பொருட்களை சர்வதேச செஞ்சிலுவை சங்கம் மூலம் வழங்கினால் அனைத்துத் தரப்பினருக்கும் சமமாக சென்றடையும். இதுதொடர்பாக மத்திய, மாநில அரசுகள் யோசிக்க வேண்டும்.

மக்கள் வாக்களித்து, வெற்றி பெற்ற பிறகு, பணம், பதவி பெறும்நோக்கத்தில் வேறு கட்சிக்கு மாறுகின்ற நடவடிக்கை ஜனநாயகப் படுகொலையாகும். எனவே, தேர்தலில் ஒரு கட்சியில் வெற்றி பெற்று வேறு கட்சிக்கு மாறினால், உடனடியாக அந்தப் பதவி பறிபோகும் அளவுக்கு கட்சித் தாவல் தடை சட்டத்தில் திருத்தம் கொண்டு வர வேண்டும்.

மத்திய அரசு தேர்வு செய்து வழங்கும் 3 பிரதிநிதிகளில் ஒருவரை ஆளுநராக மாநில அரசு தேர்ந்தெடுக்கும் என்றுதான் அம்பேத்கர் இயற்றிய அரசமைப்பு சட்டத்தில் கூறப்பட்டிருந்தது. ஆனால், அந்த நடைமுறை நாளடைவில் பின்பற்றப்படவில்லை.

தற்போது, பாஜகவினர் அல்லது பா. ஜ. க. சார்புடையவர்களே ஆளுநர்களாக நியமிக்கப்படுகின்றனர். அவர்கள் பா. ஜ. கவின் கொள்கைகளை முழங்கிவருகின்றனர். இதுபோன்ற அணுகுமுறையை மாற்றிக்கொள்ள வேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வருக்கே, ஆளுநரைவிட அதிக அதிகாரம் உள்ளது.

தமிழ்த் தேசியம் என்பது பா. ஜ. கவின் கொள்கைக்கு முற்றிலும் நேர்எதிரானது. தமிழ்த் தேசியம் பேசுவோர், மொழி வழியாக சுயாட்சி உரிமை, தாய்மொழிக்கு உரிய முக்கியத்துவம் ஆகியவற்றை வலியுறுத்துகின்றனர் - என்றார். (ஐ)

# இலங்கையில் பிடிபட்ட மீனவரை விடுவிக்குமாறு முதல்வர் கடிதம்!

சென்னை, ஜூலை 05

இலங்கைக் கடற்படையால் எல்லை தாண்டிய குற்றத்தில் பிடிபட்ட 12 மீனவர்களையும், அவர்களின் மீன்பிடிப் படகையும் விடுவிக்க வலியுறுத்தி மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழ்நாட்டை சேர்ந்த 7 மீனவர்கள் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த 5 மீனவர்கள் உள்ளிட்ட 12 இந்திய மீனவர்கள், இலங்கை கடற்படையால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களையும், அவர்களின் படகையும் உடனடியாக விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகளை விரைந்து எடுக்கக் கோரி தமிழக முதல்வர் எழுதியிருக்கும் கடிதத்தில்,

15-6-2022 அன்று முடிவடைந்த 61 நாட்கள் மீன்பிடி தடைக் காலத்துக்குப் பிறகு தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கத் தொடங்கியுள்ள நிலையில், இலங்கைக் கடற்படையினரால் 12 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள இந்தச் சம்பவம், தமிழக மீனவர்களை அச்சுறுத்தும் வகையில் உள்ளதோடு, மாநிலத்தின் கடலோரப் பகுதிகளில் பாதுகாப்பின்மையை ஏற்படுத்துவதாகவும் உள்ளது என்று குறிப்பிட்டுள்ள தமிழக முதல்வர், இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள 12 மீனவர்களையும், அவர்களின் படகையும் உடனடியாக விடுவிப்பதற்கு உரிய தூதரக வழிமுறைகள் வாயிலாக விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுள்ளார். (ஐ)

# மக்களுக்கு எரிபொருளை பகிர்ந்தளிக்க இராணுவம் முழு ஒத்துழைப்பு வழங்கும்!

## யாழ்.கட்டளைத் தளபதி ஆயரிடம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 05

**புதிதாக பதவியேற்றுள்ள யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விஜயசுந்தர யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசத்தை நேற்று ஆயர் இல்லத்தில் உத்தியோகபூர்வமாக சந்தித்து கலந்துரையாடினர்.**

இந்த சந்திப்பு தொடர்பில் யாழ்.ஆயர் கருத்து தெரிவிக்கையில்-

தற்போது யாழ்ப்பாணத்தில் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மக்கள் பல கஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள்

ஆகையால் இயன்றளவு அரச அதிபரோடு இணைந்து அவரின் கீழ் எரிபொருளைப் பொதுமக்களுக்கு பகிர்ந்தளிப்புக்குரிய ஒழுங்கமைப்பை மேற்கொண்டுள்ளோம் என யாழ். கட்டளைத் தளபதி என்னிடம் தெரிவித்தார்.

வடபகுதியில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி திட்டங்களுக்கான நிதி எதுவும் எமக்கு கிடைக்கவில்லை. இருந்தும் வறிய குடும்பங்களுக்கான உதவிகள் செய்து கொண்டிருக்கின்றோம்.

அத்தோடு எரிபொருள் தட்டுப்பாட்டின் காரணமாக போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. கொழும்பு மற்றும்



தூர இடங்களுக்கு போய் வருவது கஷ்டமாக வுள்ளது.

முக்கியமாக சுகாதாரப் பிரிவினருக்கு நாங்கள் முழு ஒத்துழைப்பையும் கொடுக்கத் தயாராக இருக்கின்றோம் என்றும் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களின் பணியை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு இராணுவம் ஒத்துழைப்பை வழங்கும் என்றும் யாழ்.மாவட்ட இராணுவ கட்டட தளபதி என்னிடம் கூறினார்-என்றார். (அ-03)





# மன்னார் நகர சபையில் பணியாற்றும் சுத்திகரிப்புப் பணியாளர் போராட்டம்

## எரிபொருள் வழங்கப்படாதமையை கண்டித்து

மன்னார், ஜூலை 05

மன்னார் நகர சபையின் சுத்திகரிப்புப் பணியாளர்கள் மற்றும் சாரதிகள் இணைந்து நேற்று திங்கட்கிழமை காலை மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

மன்னார் நகரப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வந்த கழிவு அகற்றும் நடவடிக்கைகள் கடந்த சில தினங்களாக தடைப்பட்டுள்ளன.

உரிய முறையில் எரிபொருள் வழங்கப்படாமையால் குறித்த கழிவு அகற்றும் நடவடிக்கை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக மன்னார் நகர சபையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் சுத்திகரிப்புப் பணிக்கான வாகனங்களுக்கு தேவையான எரி பொருட்கள் உரிய முறையில் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் மன்னார் நகர சபையின் சுத்திகரிப்புப் பணிக்கு தேவையான எரிபொருளை வழங்கக் கோரி நேற்று குறித்த போராட்டம் இடம்பெற்றது. (அ)

# அஞ்சல் தொழிற்சங்கத்தின் போராட்டம் கைவிடப்பட்டது

கொழும்பு, ஜூலை 05

அஞ்சல் தொழிற்சங்கத்தினர் முன்னெடுத்திருந்த தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது.

ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்டவுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் ஏற்பட்ட இணக்கப்பாட்டையடுத்து, கடந்த ஜூன் 28 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டிருந்த பணிப்புறக் கணிப்பு கைவிடப்பட்டது.

நாட்டில் நிலவும் நெருக்கடி காரணமாக, வாரத்தில், செவ்வாய், புதன் மற்றும் வியாழன் ஆகிய 3 நாட்களில் மாத்திரம் அஞ்சல் நிலையங்கள் ஊடாக சேவைகளை முன்னெடுக்க அஞ்சல் திணைக்களம் கடந்த வாரம் தீர்மானம் மேற்கொண்டிருந்தது. (அ)

# இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு கைது நடவடிக்கையால் தக்க பதிலடி!

## அமைச்சர் டக்ளஸ் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 05

"இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்."

- இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தார்.

"இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பிலிருந்து வடக்கு கடல் வளத்தைப் பாதுகாக்க நடவ



டிக்கை முன்னெடுக்கப்படுமா?" என்று பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர சபையில் நேற்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே கடற்றொழில் அமைச்சர் மேற் கண்டவாறு கூறினார்.அவர் மேலும் தெரிவிக் கையில்-

இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறல் என்பது இன்று நேற்று நடைபெறும் விடயமல்ல. நீண்டகாலமாக இடம்பெற்று வருகின்றது. இதனைத் தடுப்பதற்கு இலங்கைக் கடற்படையினர் தேவையான நடவடிக்கை எடுத்து வருகின்றனர். நேற்றுக்கூட அத்துமீறிய 12 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கை தொடரும்-என்றார். (அ)

# உணவு பாதுகாப்பை தன்னிறைவாக்கும் மரவள்ளித்தடி வழங்கல் கிளிநொச்சியில்

கிளிநொச்சி, ஜூலை 05

உணவு பாதுகாப்பை தன்னிறைவாக்கும் மரவள்ளித்தடி வழங்கும் பணி நேற்று கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டது. வன்னி தமிழ் மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் குறித்த நிகழ்வு நேற்று காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி சேவைச் சந்தை முன்பாக இடம்பெற்றது.



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை சமாளிக்கும் முகமாகவும், மரங்களை நாட்டுவதை ஊக்குவிக்கும் முகமாகவும் குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது மத தலைவர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. மரவள்ளி தடிகள் தலா ஐந்து தடிகள் எனும் அடிப்படையில் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் 5000 மரவள்ளி தடிகள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஹோமாகம தீ விபத்து சம்பவம் 6 வயதுச் சிறுமியும் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூலை05

கடந்த 25 ஆம் திகதி இரவு ஹோமாகம மாகம்மன பிரதேசத்தில் இரண்டு மாடி வீடொன்றின் கீழ்த்தளத்தில் உள்ள அறையொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் தீக்காயங்களுக்கு உள்ளான சிறுமியும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஹோமாகம மாகம்மன பகுதியைச் சேர்ந்த ரிதுஷி ரணசிங்க என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தீவிபத்து இடம்பெற்ற போது உயிரிழந்த ஆறு வயது சிறுமியின் தாய், தந்தை மற்றும் மூத்த சகோதரி ஆகியோர் அறைக்குள் இருந்துள்ளதுடன், அவர்கள் ஹோமாகம ஆதார வைத்தியசாலை மற்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அவர்களுள் குறித்த சிறுமியின் தந்தை அதே நாளில் உயிரிழந்ததுடன் தாய் மறுநாளும் மற்றும் மூத்த சகோதரி சம்பவம் நடந்த மூன்று நாட்களுக்குப் பிறகும் உயிரிழந்திருந்தனர்.

படுகாயமடைந்த ஆறு வயது சிறுமி லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். (அ)

# வடக்கு-கிழக்கில் வெடிகுண்டு மிரட்டல் தாக்குதல் நடப்பதற்கு வாய்ப்பு உண்டா?

## அனுரகுமார எம்.பி. அரசாங்கத்திடம் கேள்வி

**கொழும்பு, ஜூலை 05**

**ஜூலை 5 அல்லது 6 ஆம் திகதிகளில் வடக்கு, கிழக்கு அல்லது தென்னிலங்கையில் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெறலாம் என எச்சரித்து, பாதுகாப்புச் செயலாளருக்கு பொலிஸ்மா அதிபர் அனுப்பிய கடிதம் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க நேற்று கேள்வி எழுப்பியுள்ளார்.**

இந்தத் தகவல்கள் எப்படி, எங்கிருந்து பெறப்பட்டன என்பதையும், அப்படித் தாக்குதல் நடத்த வாய்ப்பு உள்ளதா என்பதையும் அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே பாராளுமன்ற உறுப்பினர் அனுர குமார இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், குறித்த கடிதத்தின் பிரகாரம் சர்வதேச உளவு நிறுவனங்களின் பங்களிப்புடன் மேற்படி இரண்டு தினங்களில் இடம்பெறவுள்ள கரும்புலிகள்



நினைவேந்தல் நிகழ்வுகளை இலக்கு வைத்து இந்த குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த காலப்பகுதியில் எந்தவொரு நிகழ்வுகளிலும் பங்குபற்ற வேண்டாம் என வடக்கு, கிழக்கில் உள்ள சர்வதேச அமைப்புகளுடன் தொடர்புடைய அதிகாரிகள் மற்றும் பொதுமக்களை இந்த ஆவணம் எச்சரிக்கின்றது-என்றார்.

பாதுகாப்புச் செயலாளருக்கு அனுப்பப்பட்ட ஆவணத்தின் சில பகுதிகளையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தத் தகவல்கள் எப்படி, எங்கிருந்து பெறப்பட்டன என்பதையும், அப்படித் தாக்குதல் நடத்த வாய்ப்பு உள்ளதா என்பதையும் அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

தற்போது நாடளாவிய ரீதியில் இடம்பெற்றுவரும் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களையும் உணர்வுகளையும் நசுக்கவே இவ்வாறான செய்திகள் பகிரப்படுவதாகவும் சந்தேகம் இருப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க மேலும் கூறினார். (அ)

# எரிபொருள் விநியோக முன்னுரிமை; விளக்கமளிக்க உயர்நீதிமன்று உத்தரவு!

கொழும்பு, ஜூலை 05

எரிபொருளை விற்பனை மற்றும் விநியோகிப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ள துறைகள் தொடர்பான விளக்கம் அடங்கிய அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னதாக குறித்த அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், மின்சாரம் வழங்கல் தொடர்பிலான சகல சேவைகள், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் எரிபொருள் வழங்கல் அல்லது விநியோகம், வைத்தியசாலைகள், மருந்தகங்கள், நோயாளர் சார்ந்த அனைத்து சேவைகளையும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வினால் நேற்று முன் தினம் அதிவிசேட வர்த்தமானியொன்று வெளியிடப்பட்டுள்ளது. (அ)

# மீனவர்களுக்கு எரிபொருள் இம்மாத இறுதிக்குள் வரும்

## சபையில் கூறினார் அமைச்சர் டக்ளஸ்

கொழும்பு, ஜூலை 05

நாடு முழுவதும் எரிபொருள் பிரச்னை காணப்படுகிறது. எரிபொருள் இல்லாமல் மீனவர்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர். போதுமான எரிபொருள் நாட்டில் இல்லை என்பதை ஏற்றுக்கொள்வதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மீனவர்களின் மண்ணெண்ணெய் பிரச்னைக்கு இந்த மாத இறுதியில் நான் தீர்வு பெற்றுக் கொடுப்பேன். இதை நான் உறுதியாகக் கூறுகின்றேன். இதனை தீர்ப்பதற்கு அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறது- என்றார். (அ)

# மக்களுக்கு சேவைகளை வழங்க எரிபொருள் பெற்றுத் தாருங்கள்

## கிளிநொச்சி கிராம அலுவலர்கள் மாவட்ட அரச அதிபரிடம் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 05

எரிபொருள் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்குமாறு கிளிநொச்சி மாவட்டத்தில் பணி புரியும் கிராம சேவையாளர்கள் ஒன்றிணைந்து நேற்று கோரிக்கை விடுத்தனர்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருக்கும் கிராம சேவையாளர்களுக்குமான கலந்துரையாடல் நேற்று முற்பகல் 11 மணியளவில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

பொருளாதார நெருக்கடியின் மத்தியில் பொதுமக்களுக்கான சேவையை உரிய நேரத்தில் வழங்க முடியாத நிலை காணப்படுவதாகவும், பொது மக்களுக்கான சேவையை உரிய முறையில் முன்னெடுப்பதற்கு எரிபொருள் பெற்றுக்கொள்ள முடியாது உள்ளதாகவும் அரசாங்க அதிபரிடம் அவர்கள் தெரிவித்தனர்.

நாட்டில் ஏனைய அத்தியாவசிய சேவையில் ஈடுபடுவர்களுக்கான எரிபொருள் பங்கீடு போன்று, கிராம மட்டத்தில் மக்களுக்கான சேவையை உரிய காலப்பகுதியில் முன்னெடுப்பதற்கு எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இதன்போது அரசாங்க அதிபரிடம் கிராம அலுவலர்கள் கோரினர்.

இதன்போது பதிலளித்த அரசாங்க அதிபர், இவ்வாறான பிரச்னைக்கு முகம் கொடுக்கின்றீர்கள் என்பதில் மாற்று கருத்துக்கு இடமில்லை. ஆனால் இதுவரை பொது நிர்வாக அமைச்சின் கீழ் உள்ள உத்தியோகத்தர்கள், அத்தியாவசிய சேவைக்குள் உள்வாங்கப்பட்டார்களா என்ற விடயம் இருக்கவில்லை.

ஆனால் ஜனாதிபதி வெளியிட்டுள்ள விசேட அறிவிப்பின் பிரகாரம் நாங்களும் அதற்குள் உள்வாங்கப்படுவதாக நம்புகின்றேன். அதுமாத்திரமல்லாது, வேலையை கொண்டு செல்வதற்கு எரிபொருள் என்பது அடிப்படையான விடயமாகும்.

ஆனால் மாவட்டத்தில் பெற்றோல் என்பது மிக குறைந்த அளவில்தான் இருக் கின்றது.

அதேவேளை கடந்த வாரம் சுகாதார துறையினருக்காக எரிபொருள் கிடைத்திருந்தது.

அவ்வாறு வந்த எரிபொருளில் மிகுதி இருந்தால் நீங்கள் எதிர்பார்ப்பது போன்றில்லாது, 1 லீற்றராக தந்து ஆரம்பித்து விடலாம். அவ்வாறு பெற முடிந்தால் பெற்றுத் தர முடியும். ஆனால் அடுத்து எரிபொருள் கிடைக்குமாக இருந்தால் கட்டாயமாக பெற்றுத்தர முடியும். ஆனால் பெற்றோல் கிடைக்கும் என்பதற்கான உறுதி கிடைக்கவில்லை-என்றார்.



இந்த கலந்துரையாடலின்போது எரிபொருள் கிடைக்கும் பட்சத்தில் கிராம சேவையாளர்கள் முன்னிலைப்படுத்தி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மாவட்டத்தில் காணப்படும் எரிபொருளை ஓரளவேனும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# யாழ்.பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியம் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 05

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தெரிவு நேற்றுக் காலை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தில் உதவிப்பதிவாளர் (நலச் சேவைகள் கிளை) எஸ்.ஐங்கரன் மற்றும் சிரேஷ்ட மாணவ ஆலோசகர் ராஜ் உமேஷ் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவராக அ.விஜயகுமார் கலைப்பீடத்திலிருந்தும், செயலாளராக எஸ்.ராவீன் விஞ்ஞான பீடத்திலிருந்தும், பொருளாளராக எஸ்.சேந்தன் முகாமைத்துவ பீடத்திலிருந்தும் ஏனைய உறுப்பினர்கள் ஒவ்வொரு பீடத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்டனர். (அ)

# இலங்கை அரசுக்கு எதிராக இத்தாலியில் ஆர்ப்பாட்டம்!

ரோம், ஜூலை 05

கோட்டாபய, ரணில் அரசாங்கத்தை உடனடியாக வீட்டுக்கு அனுப்புவோம் என்ற கோஷத்துடன் இத்தாலியின் பிரேசியா நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் இலங்கை அரசாங்கத்திற்கும் அதன் அடக்குமுறைக் கொள்கைகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து நாடகமொன்றும் நடைபெற்றது.

இந்த எதிர்ப்பு நாடகத்தில் இலங்கையைச் சேர்ந்த நடிகர்களும் பங்கெடுத்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

# 19 கோடி ரூபா பெறுமதியான தங்கம் நாணயங்களுடன் இரு இந்தியர் கைது!

கொழும்பு, ஜூலை 05

19 கோடி ரூபா பெறுமதியான தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்களுடன் இந்தியப் பிரஜைகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரையும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்ததாக சுங்கப்பிரிவின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் குறித்த இருவர் தொடர்பாக மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ)

# நாட்டு மக்களின் செயல்பாடுகள் இந்த வாரம் பாதிப்புக்குள்ளாகும்

## எரிபொருள் நெருக்கடியே காரணம்

**கொழும்பு, ஜூலை 05**

**இந்த வாரம் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.எரிபொருள் நெருக்கடி காரணமாக போக்குவரத்து நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டமையே இதற்கு பிரதான காரணம் என தெரிவிக்கப்படுகிறது.**

எரிபொருள் நெருக்கடி காரணமாக பயணிகள் போக்குவரத்து பஸ் சேவைகள் மாத்திரமன்றி அத்தியாவசிய உணவுப் பொருட்களின் போக்குவரத்தும் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு, அரச ஊழியர்களை பணிக்கு அழைக்கும் செயல்பாடுகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

தனியார் மற்றும் வங்கித் துறைகளின் செயல்பாடுகளும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

அம்புலன்ஸ் சேவைகள் மற்றும் மருத்துவமனைகளில் மருத்துவ விநியோக சேவைகள் போதிய எரிபொருள் இல்லாததால் பல சிக்கல்களை எதிர்கொள்வதாக கூறப்படுகிறது.

தற்போதைய நிலைமையை கருத்திற் கொண்டு சுகாதார பணியாளர்களை எவ்வாறு சேவைக்கு அழைக்கவேண்டும் என பல ஆலோசனைகள் அரசாங்கத்துக்கு முன்வைக்கப்பட்ட போதிலும் இதுவரை உரிய பதில் கிடைக்கவில்லை என அரச தாதியர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தினசரி இயங்கும் பஸ்களின் எண்ணிக்கை சுமார் 5 வீதமாக குறைக்கப்படும் என அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர்-

தனியார் பஸ்களுக்கு இலங்கை டிப்போவில் எரிபொருள் முறையாக வழங்குவது இல்லை. ஐ.ஓ.சி எரிபொருள் நிலையங்களில் இருந்தும் எரிபொருள் கிடைப்பதில்லை. சிபெட்கோ நிறுவனமும் அதையே கூறுகிறது. இந்த நாட்டில் உள்ள 20,000 தனியார் பஸ்களில் சுமார் 500 தனியார் பஸ்கள் மட்டுமே இயங்குகின்றன-என்றார். (அ)

# லங்காபுர பிரதேசசபை நிர்வாக அதிகாரி கூரிய ஆயுதத்தினால் தாக்கிக் கொலை!

கொழும்பு, ஜூலை 05

பொலனறுவை - லங்காபுர பிரதேச சபையின் தலைமை நிர்வாக அதிகாரி ஒருவர் நேற்று காலை கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

யமுனா பத்மினி என்ற 42 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயாரே இந்த தாக்குதலில் உயிரிழந்துள்ளார்.

இந்த தாக்குதலில் தலையில் பலத்த காயம் அடைந்த அந்த அதிகாரி, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அறையில் நபர் ஒருவர் இருப்பதைக் கண்டதாகவும் ஆனால் இருள் காரணமாக அவரை அடையாளம் காண முடியவில்லை என்றும் உயிரிழந்த பெண்ணின் கணவர் தெரிவித்தார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# மண் அடுப்புகளின் விலைகள் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 05

நாட்டில் நிலவும் எரிவாயு தட்டுப்பாட்டால் மண் அடுப்புக்களுக்கு அதிக கேள்வி ஏற்பட்டுள்ளது.

அத்துடன், மிகக் குறைந்த விலைகளில் விற்பனை செய்யப்பட்ட மண் அடுப்புகளின் விலைகள் தற்போது 850 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

முன்னதாக குறைந்தளவானோரே மண் அடுப்பை கொள்வனவு செய்ததாக உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

எனினும் தற்போது, அதிகளவான கேள்வி நிலவுவதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர். (அ)

# எரிபொருள் விநியோகத்தை மேலும் விஸ்தரித்த ஐ.ஓ.சி!

கொழும்பு, ஜூலை 05

லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் எரிபொருள் விநியோகத்தை மேலும் விஸ்தரித்துள்ளது.

இதன்படி, நேற்று முன்தினம் ஒரு மில்லியன் லீற்றர் எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனோஜ் குப்தா தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியில், நேற்று முன்தினம் விடுமுறை என்ற போதிலும் திருகோணமலை முனையத்தின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

கொழும்புக்கு தேவையான எரிபொருளை கனிய எண்ணெய் மொத்த களஞ்சிய முனையத்தின் தலைவர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் எம்.ஆர் டபிள்யு சொய்ஷாவினால் ஐ.ஓ.சி நிறுவனத்திற்கு மேலதிக தாங்கி ஊர்திகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மனோஜ் குப்தா குறிப்பிட்டார். (அ)

# பிரான்ஸிலிருந்து இலங்கை வந்த பயணிகளின் பொதிகள் மாயம்!

## போராட்டத்தின் பின் வெளியே வந்தன

கொழும்பு, ஜூலை 05

பிரான்ஸ் தலைநகர் பரிஸிலிருந்து நேற்றுக் காலை இலங்கைக்கு வந்த பயணிகள் பலரின் பொதிகளைக் காணவில்லை என்று பயணிகள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் போராட்டம் நடத்தினர்.

பரிஸிலிருந்து இலங்கைக்கு வந்த பயணிகள் விமானம் நேற்றுக் காலை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

அதில் பயணித்த பயணிகள் தாம் கொண்டுவந்த பொதிகளை பெறுவதற்கு முயன்றபோது, அவ்வாறான பொருட்கள் இல்லை என்று பதிலளிக்கப்பட்டது.

சம்பவத்தை அடுத்து ஆத்திரமடைந்த பயணிகள், விமான நிலையத்திற்குள்ளேயே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நீண்ட நேர இழுபறியின் பின்னர் பொதிகள் பயணிகளிடம் கையளிக்கப்பட்டன என்று விமானத்தில் பயணித்த பயணிகள் தெரிவித்தனர்.

பொருட்கள் திருடப்பட்டனவா? அல்லது நிர்வாகம் அவ்வாறான நடவடிக்கையை மேற்கொண்டதா? என்பது குறித்து தெரியவில்லை என்று பயணிகள் கூறினர். (அ)

# வடக்கு கடல் வளத்தைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா?

## அமைச்சர் டக்ளஸிடம் கேட்டார் தயாசிறி

கொழும்பு, ஜூலை 05

“நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டால் கடற்படையினருக்கு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட முடியாதுள்ளது. இந்நிலையில் வடக்கு கடற்பரப்பை இந்திய மீனவர்கள் ஆக்கிரமிக்கின்றனர். எனவே, எமது கடல் வளத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?”

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் சபையில் நேற்று கேள்வி எழுப்பினார்.

அத்துடன், எரிபொருள் பிரச்னையால் கடற்றொழிலாளர்களுக்குத் தமது தொழிலை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனவும், அவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் தயாசிறி ஜயசேகர எம்.பி. இதன்போது வலியுறுத்தினார். (அ)

# தனியார் பஸ் சேவைகள் முற்றாக முடங்கும் நிலை!

கொழும்பு, ஜூலை 05

எதிர்வரும் இரண்டு நாட்களில் தனியார் பஸ் சேவைகள் முழுமையாக தடைப்படக்கூடும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று 5 முதல் 10 சத வீதமான தனியார் பஸ்களே சேவையில் ஈடுபட்டதாக அதன் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். (அ)

# அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்க்கும் வயதெல்லையை மாற்றுவதற்கு தீர்மானம்

கொழும்பு, ஜூலை. 05

அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்ட பட்டதாரிகளை, ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்க்கும் போது தடையாக உள்ள வயது வரம்பு தடையை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த உறுதியளித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த சுசில் பிரேமஜயந்த இதனை தெரிவித்தார்.

அரச சேவையாளர்களின் நியமன வயது வரம்பு 45ஆக உள்ளது. எனினும் ஆசிரியர் சேவைக்கான நியமங்களின்படி, 35 வய துக்கு உட்பட்டவர்களே சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

இந்த நிலையில், இந்த வயது வரம்புக்கு அப்பாற்பட்ட, அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்ப்பதற்காக நியமங்களை மாற்றியமைக்க அரசாங்கம் தயாராக உள்ளது. எனினும் இந்த விடயத்துக்கு தொழிற்சங்கங்களின் இணக்கங்களை பெறவேண்டியுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# கைதான இந்திய மீனவர்களுக்கு 8ஆம் திகதி வரை விளக்கமறியல்!

யாழ்ப்பாணம், ஜூலை 05

அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 12 பேரையும் எதிர்வரும் 08ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி கிருஷாந் பொன்னுத்துரை உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நண்பகல் பருத்தித்துறைக்கு அண்மித்த கடற்பரப்பில் ஒரு படகில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த 12 மீனவர்களும் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் பருத்தித்துறைப் பொலிஸார் ஊடாக நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதே அவர்களை எதிர்வரும் 08 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார். (அ)

# இலங்கை பாட்டி மரணம் -

# தமிழ்நாட்டுக்கு கணவருடன் அடைக்கலம் தேடி வந்தவர்

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த ஜூன் 27ஆம் திகதி காலையில் தமிழ்நாட்டுக்கு அடைக்கலம் தேடி கணவருடன் வந்து தனுஷ்கோடி கடற்கரையில் மயங்கிய நிலையில் கண்டு பிடிக்கப்பட்ட பரமேஸ்வரி என்ற பாட்டி ஜூலை 2ஆம் திகதி இரவு காலமானார். இந்திய கடலோர காவல் படையால் மீட்கப்பட்ட இருவரும் தமிழ்நாடு காவல்துறையிடம் ஒப்படைக்கப்பட்ட இந்த தம்பதியில் பரமேஸ்வரி மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், சனிக்கிழமை நள்ளிரவு உயிரிழந்தார்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் அடுத்த தனுஷ்கோடி கோதண்டராமர் வடக்கு கடற்கரையில் ஜூன் 27ஆம் திகதி காலை இலங்கையைச் சேர்ந்த இரு முதியவர்கள் மயங்கிய நிலையில் கிடப்பதாக ராமேஸ்வரம் கடலோர காவல் குழும பொலிஸாருக்கு மீனவர்கள் தகவல் அளித்தனர்.



இதையடுத்து ராமேஸ்வரம் கடலோர பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று இருவரையும் மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இருவரும் மயங்கிய நிலையில் இருந்ததால் ஆம்புலன்சுக்கு தகவல் அளிக்கப்பட்டது.

இருவரும் கடற்கரையில் மயங்கி கிடந்ததால் ஆம்புலன்ஸ் வாகனத்தால் சம்பந்தப்பட்ட இடத்திற்கு சென்று முதியவர்கள் இருவரையும் மீட்க முடியவில்லை. உடனடியாக மரைன் பொலிஸார் மற்றும் ராமநாத புரம் மாவட்ட நிர்வாகம் சார்பில் மண்டபம் கடலோர காவல் படை அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்து அவர்களிடம் உதவி கோரினர். மண்டபம் கடலோர காவல் படைக்கு சொந்தமான ஹோவர் கிராப்ட் ரோந்து கப்பலில் முதியவர்கள் இருவரையும் மயங்கிய நிலையில் மீட்டு முதலுதவி சிகிச்சைக்காக ராமேஸ்வரம் அரசு மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தனர்.

முதலுதவி சிகிச்சைக்கு பின் மேல் சிகிச்சைக்காக இருவரும் ராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால் இலங்கை மூதாட்டிக்கு சுயநினைவு வராததால் அவருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால் அவருடைய கணவருக்கு சிகிச்சைக்கு பின் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டது.

**இலங்கையில் வாழ வழி இல்லை**

முதியவரிடம் மத்திய, மாநில உளவுத்துறை அதிகாரிகள் நடத்திய விசாரணையில் இவர்கள் இலங்கை மன்னார் மாவட்டம் முருங்கன்பிட்டி பகுதியை சேர்ந்த சிவன் (82) அவரது மனைவி பரமேஸ்வரி (70) என தெரிய வந்தது.

இவர்கள் இருவரும் இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி மற்றும் பரமேஸ்வரிக்கு ரத்த அழுத்தம், சர்க்கரை நோய் இருப்பதால் தினசரி மருந்து எடுத்து கொள்ள வேண்டும். ஆனால் அந்த மருந்துகளுக்கு இலங்கையில் தற்போது தட்டுப்பாடு உள்ளதால் மருத்துவ சிகிச்சைக்கு பணம் இல்லாமல் தமிழகத்துக்கு அகதிகளாக வந்து உள்ளனர். இருவரையும் படகில் அழைத்து வந்தவர்கள் கடற்கரை ஓரம் கடலில் தள்ளி விட்டு சென்றதாகவும் விசாரணையில் சிவன் தெரிவித்தார்.

மேலும் திருச்சி வாழவந்தான் கோட்டை அகதிகள் முகாமில் மகன் ராஜா மற்றும் மகள் உதயராணி இருவரும் குடும்பத்துடன் தங்கி இருப்பதால் அவர்களை சந்தித்து அவர்களுடன் சேர்ந்து வாழ விரும்புவதாக தெரிவித்தார்.

இந்த நிலையில் பரமேஸ்வரிக்கு ராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தலையில் ஸ்கேன் செய்த போது மூளையில் கட்டி இருப்பதும் அதனை உடனடியாக அகற்ற வேண்டும் என மருத்துவர்கள் தெரிவித்தனர். இதையடுத்து மாவட்ட ஆட்சியர் ஜானி டாம் வர்க்கீஸ் உடனடியாக பரமேஸ்வரியை மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்.



மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பரமேஸ்வரிக்கு தலையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்ட நிலையில் சனிக்கிழமை இரவு சுமார் 9 மணி அளவில் பரமேஸ்வரி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

**சிகிச்சைக்காக மதுரைக்கு அனுப்பி வைத்த மாவட்ட ஆட்சியர்**

இது குறித்து ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் ஜானி டாம் வர்க்கீஸ், பேசுகையில்,

“தனுஷ்கோடி வழியாக தமிழகத்திற்கு அகதிகளாக வரும் இலங்கை தமிழர்களுக்கு தமிழக முதல்வர் உத்தரவின் பேரில் ராமநாதபுரம் மாவட்ட நிர்வாகம் சார்பில் முழு உதவிகள் செய்யப்பட்டு வருகிறது.

கடந்த திங்கட்கிழமை காலை இலங்கையை சேர்ந்த இருவர் மயங்கிய நிலையில் கோதண்டராமர் கடற்கரையில் தஞ்சம் அடைந்துள்ளதாக கிடைத்த தகவலையடுத்து உடனடியாக கடலோர காவல் படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு இருவரையும் மீட்டு அவர்களுக்கு ராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

தொடர்ந்து பரமேஸ்வரி உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதால் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். பரமேஸ்வரிக்கு தலையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்தார்.

பரமேஸ்வரியின் மகன் மற்றும் மகள் இருவரும் குடும்பத்துடன் வாழவந்தான் கோட்டை இலங்கை அகதிகள் முகாமில் தங்கியுள்ளனர். உடனடியாக அவர்களுக்கு தகவல் அளிக்கப்பட்டு அவர்கள் மதுரைக்கு வந்து உயிரிழந்த பரமேஸ்வரியின் உடலை பெற்றுக்கொண்டனர்.

சென்னையில் உள்ள தமிழ்நாடு அரசு அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு துறை ஆணையர் வழிகாட்டுதலின் படி பரமேஸ்வரியின் இறுதி சடங்கு அவரது உறவினர்களால் செய்யப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் இருந்து அகதிகளாக வந்து மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழர்களுக்கு உரிய உதவிகளை சிறப்பு கவனம் செலுத்தி மாவட்ட நிர்வாகம் செய்து வருவதாக” மாவட்ட ஆட்சியர் ஜானி டாம் வர்க்கீஸ் தெரிவித்தார்.

**படகில் வரும் போது தலையில் ஏற்பட்ட காயம்**

உயிரிழந்த பரமேஸ்வரியின் மகள் உதயராணி பேசுகையில், இலங்கையில் நடந்த யுத்தத்தின் போது 1990 ஆம் ஆண்டு அகதிகளாக நானும் என் கணவரும் இந்தியா வந்து திருச்சி வாழவந்தான் கோட்டை அகதிகள் முகாமில் தங்கி உள்ளோம்.

எனது பெற்றோர் மன்னார் மாவட்டத்தில் வசித்து வந்தனர். என் அம்மா பலகாரம் சுட்டு கொடுக்க என் அப்பா அதனை விற்பனை செய்து வாழ்ந்து வந்தனர்.

தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள நிலைமையால் பலகாரம் விற்பனை செய்ய முடியாமல் வாழ வழியின்றி தங்களிடம் இருந்த நகையை விற்று படகுக்கு பணம் கொடுத்து என் அம்மா, அப்பா இருவரும் அகதிகளாக தனுஷ்கோடி வந்துள்ளனர்.

இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு வருவதாக எங்களுக்கு முன்கூட்டியே தகவல் ஏதும் கொடுக்கவில்லை. செய்தி வாயிலாக எனது அம்மா, அப்பா இருவரும் தனுஷ்கோடி வந்ததாக தெரிய வந்தது. உடனடியாக ராமேஸ்வரம் சென்று பார்த்த போது இருவரையும் சிகிச்சைக்காக மதுரை அனுப்பி விட்டனர்.

எனது அம்மாவுக்கு சர்க்கரை மற்றும் ரத்த அழுத்த நோய் மட்டுமே இருந்தது மூளையில் கட்டியோ அல்லது தலையில் பிரச்சனை ஒன்றும் இல்லை. படகில் அழைத்து வந்தவர்கள் அவர்கள் இருவரையும் படகுக்குள் மறைந்து உட்காரும்படி சொல்லியுள்ளனர். பல மணி நேர ஆபத்தான பயணத்தின் போது கடல் அலை காரணமாக படகில் முட்டி தலைக்குள் காயம் ஏற்பட்டுள்ளது.

எனது அம்மாவின் உடல் உடற்கூறு ஆய்விற்கு பின் என்னிடம் அரசு சார்பில் ஒப்படைக்கப்பட்டது. அம்மாவின் உடலை திருச்சி வாழவந்தான் கோட்டை அகதிகள் முகாமில் தங்கியுள்ள எங்கள் உறவினர்கள் அஞ்சலிக்கு பின் இறுதி சடங்கு செய்ய உள்ளோம் என்றார் உதயராணி.


உயிரிழந்த பரமேஸ்வரியின் மகன் ராஜா பேசுகையில், “மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த என் அம்மாவிற்கு மருத்துவர்கள் உரிய முறையில் சிகிச்சை அளித்தனர். ஆனால் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

உடற்கூராய்வில் மூளையில் ஏற்பட்ட காயம் காரணமாக உயிரிழந்ததாக மருத்துவர்கள் தரப்பில் கூறப்படுகிறது. எனது அம்மா இறந்த செய்தி இதுவரை என் அப்பாவுக்குத் தெரியாது. அப்பா உடல் நிலை இப்போது தான் மெல்ல மெல்ல தேறி வருகிறது.



அம்மா இறந்த செய்தியை அறிந்தால் அப்பாவால் தாங்க முடியாது எனவே இதுவரை அம்மா இறந்தது குறித்து அவரிடம் தெரிவிக்கவில்லை. உடல்நிலை சரியாகிய பின் அவரிடம் அம்மாவின் இறப்பு குறித்து சொல்லலாம் என முடிவு செய்துள்ளோம்,” என்கிறார் ராஜா.

மறவன்புலவு க. சச்சிதானந்தன்



# பட்டுத் தெளியட்டும்

“இஞ்சேரும் நான் வந்திட்டன்.. இஞ்சேரும்..”

ஈருருளி மணியை அடித்து அழைத்தார், பண்டிதர் சிங்கராயர்.

வழமையாக மணி கேட்டவுடன் கணவரைப் புன்னகை வீசி வரவேற்பவர் சிந்தியா. சில நாள்களாகவே சிந்தியாவின் போக்கில் ஒரு மாற்றம்.

நண்பகல் உணவுக்கு வருபவர் படலையில் நின்று மணியடிப்பார். சிந்தியா சிரித்த முகத்துடன் வருவார். சில நாள்களாக அவள் வருவதில்லை.

“இஞ்சேரும்.. இஞ்சேரும்” என்று கூப்பிட்டாலும் வருவதில்லை. மணி அடித்தாலும் வருவதில்லை.

ஈருருளியை மதிலோடு சாய்த்தார். காலைக் கழுவினார். வாயில் வழி முன்னறைக்குள் புகுந்தார்.

“இஞ்சேரும்.. இஞ்சேரும்..” என்று கூப்பிட்டார்.

“ஓ.. வாறன்..” அடுப்படிப் பின் படிக்கட்டில் குந்தி இருந்தவாறே சிந்தியா குரல் கொடுத்தாள். ஆனால் வரவில்லை.

இவர் அவளிடம் போனார். வானத்தை வெறுத்துப் பார்த்தவாறு சிந்தியா இருந்தாள். இவர் போனதைக் கவனிக்காத மாதிரியே இருந்தாள்.

“இஞ்சேரும்..” இவர் அழைத்தார்.

சிந்தியா முகத்தைத் திருப்பினாள். கணவரைப் பார்த்தாள். வெறுப்பும் அருவருப்பும் முகத்தில் கொப்பளித்தது. அவள் பேசவில்லை.

“சாப்பாட்டை எடுமன்- சாப்பிட்டுட்டுப் போவேணுமல்லே..”

“போங்கோ வாறன்..” சிந்தியாவின் குரலில் கடுப்புத் தொனித்தது.

மேசையில் இருந்த பொருள்களை ஒதுக்கினார். கதிரையை இழுத்துப் போட்டார். இருந்தார். தட்டில் சோறு. மேலே உறைப்புக் குழம்பு. கொஞ்சம் பொரியல். வைத்த சிந்தியா மீண்டும் அடுப்படிப் பின் படிக்கட்டுக்குக் குந்தப் போனாள்.

சாப்பிடும்போது விக்கலெடுக்கத் தண்ணீர கேட்டார். சிந்தியா வரவில்லை. தானே போய்த் தண்ணீர் வார்த்துக் குடித்தார். சாப்பிட்டு முடிந்ததும் முன் விறாந்தைக் கதிரையில் சாய்ந்தார் சிங்கராயர்.

கண் அயரமுன் எழுந்தார். “இஞ்சேரும்.. நான் வாறன்..” என்றார்.

சிந்தியாவிடமிருந்து பதிலே வரவில்லை. “நான் போட்டு வாறனப்பா..” சொன்னவர் ஈருருளியை எடுத்துப் படலை வழி பள்ளிக்குப் பயணமானார்.

“ஒருவேளை அவளுக்குத் தெரிஞ்சு போச்சோ..” நினைத்தவாறே ஈருருளியை ஓட்டினார்.

கொஞ்ச நேரத்தில் படலையைத் திறந்து வீட்டுக்கு உள்ளே வந்தவள் சரிக்கா. சிங்கராயரின் அக்கா. நேரே சமையலறை போனாள். சிந்தியாவைப் பார்த்தாள். “மச்சாள் விட்டுக் கொடுக்காதேங்கோ.. உவன் தம்பிக்குப் பாடம் படிப்பிக்கவேணும். உப்பிடியும் செய்யிறதோ?”

சிந்தியா சலனமற்ற முகத்துடன் சரிக்காவைப் பார்த்தாள். பதிலேதும் சொல்லவில்லை.

“இரண்டு முருங்கைக்காய் ஆய வந்தனான்..” எனச் சமையலறைக்குப் பின்பக்கம் போன சரிக்கா, பின்வளவுப் பொட்டுக்குள்ளாலை அடுத்த வீட்டுக்குப் போனாள்.

கொஞ்ச நேரம் கழித்து அதே பொட்டுக்குள்ளாலை வந்தவள் பிரியா. சிங்கராயரின் தங்கை.

கிணற்றடியில் குந்தி இருந்து கிடுகு பின்னிக் கொண்டிருந்த சிந்தியாவைக் கண்டாள். “மச்சாள்.. நீங்கள் கடுமையான உழைப்பாளி. எந்த நேரமும் ஏதோ ஒண்டிலை இருப்பியள்..”

சிந்தியாவின் முகத்தில் ஒரு கீற்றுப் புன்னகை. மீண்டும் அதே வாட்டம்.

“மச்சாள் யோசிக்கிறியள்.. யோசியாதேங்கோ.. அண்ணரைத் திருத்தவேணும்.. அது உங்களாலை முடியும்.. ஆனா எதுக்கும் விட்டுக் கொடுக்காதேயுங்கோ.. உவருக்குப் பாடம் படிப்பிக்கவேணும்” பிரியா சொன்னாள்.

பள்ளிக்குப் போன சிங்கராயர், பத்தாம் வகுப்புக்குப் படிப்பித்து முடித்ததும் அறைக்கு வந்தார். தண்ணீர் குடித்தார். கதிரையில் இருக்கப் போனவர், மாணவி ஒருத்தி வந்ததைக் கண்டார். “என்ன பிள்ளை?” எனக் கேட்டார்.

“சின்மயி ஆசிரியை வெளியாலை நிக்கிறா, நீங்கள் இருக்கிறியளோ.. எண்டு பாத்து வரச் சொன்னவ” மாணவி சொன்னாள்.

“சரி வாறன் எண்டு சொல்லும். போம்” என்றார் சிங்கராயர்.

சிங்கராயர் வெளியே வந்தார். பெயரைப் போல உயரம் குறைந்தவள், மேனியோ பொன் மஞ்சள். “என்ன.. எப்படி?” சின்மயியிடம் கேட்டார்.

“பின்னேரம் வாறியளோ ஏதும் வேலையோ” சின்மயி கேட்டாள்.

“சரி போம் வாறன்” சிங்கராயர் சொன்னார்.

சின்மயியும் சிங்கராயரும் குலாவும் செய்தி காதுக்கெட்டிய பின்னரேயே சிந்தியாவின் அன்புப் போக்கு சிங்கராயர் மீது அக்கினிப் போக்காக மாறியது.

சிந்தியாவுக்காகச் சிங்கராயர் வைத்திருந்த அட்டியல் சின்மயியின் கழுத்துக்குப் போனதைச் சிந்தியா தெரிந்ததும் “ஆ.. அட்டியல் தானே.. அவர் போகவில்லையே, என்னோடேயே இருக்கிறார்”. சிந்தியா கண்டுகொள்ளவில்லை.

சிங்கராயருக்கும் சிந்தியாவுக்கும் ஒரே மகள் அமிழ்து. திருமணத்தின்போது சீதனமாகக் கொடுப்பதாகச் சொன்ன காணியைக் கொடுக்காமல் இழுத்தடிக்கிறார் சிங்கராயர். அவருக்குக் கொடுக்க மனமில்லை.

சிந்தியா பலமுறை சொல்லிவிட்டாள். அமிழ்துவுக்குரியதை அமிழ்துக்குக் கொடுத்திடுங்கோ. “ஓம்.. ஓம்” என்று சொல்லுறதோடை சரி. சிங்கராயர் இழுத்தடித்தார்.

மகளுக்கும் தாய்க்கும் தொப்புள் கொடி உறவு. பாசம் என்ற பாசம். ஒருமுறை அமிழ்துக்கும் கணவன் கரனுக்கும் இடையே ஏதோ சிக்கல். சிந்தியா போய் கரனைப் பேசிப்போட்டாள். அதற்குப் பிறகு அமிழ்துக்குத் தாயோடை பிடிப்புக் குறைந்தது. கரனும் கொஞ்சம் கோவக்காரன்.

‘சீதனக் காணியை அப்பா தராவிட்டாலும் அம்மா வாங்கித் தந்திருக்க வேண்டாமா’ என்ற சினமும் அமிழ்துவுக்கு.

சின்மயியும் சிங்கராயரை விடுவதாயில்லை. சிந்தியாவும் செய்வதறியாது திகைத்திருந்தாள்.

இந்த நேரத்தில் சிங்கராயருக்கு நெஞ்சு வலி வந்தது. மருத்துவர்களும் கைவிட்டு விடுவார்களோ என்ற நேரம்.

இதுதான் சாட்டு என்று சின்மயி மாயமானாள். வேறு பள்ளிக்கு மாற்றலாய்ப் போனாளாம்.

சிங்கராயருக்குச் சிந்தியாவை விட்டால் வேறு யாரும் இல்லை. அக்காள் சரிக்கா, தங்கை பிரியா இருவரும் சிந்தியா பக்கம்.

மனிதாபிமானத்துடன் சிந்தியா நடந்து கொண்டாள். தேவையான மருத்துவம் செய்வித்தாள். தேவையான சத்துணவு கொடுத்தாள். இரவெல்லாம் கண்விழித்துச் சிங்கராயரைப் பார்த்தாள். ஆனாலும் சிந்தியாவின் மனத்தில் சிங்கராயர் மீதான அருவருப்புக் குறையவில்லை.

“அப்பாவுக்கு ஏதும் ஆகமுன் சீதனக் காணியை எழுதித் தாங்கோ” என அமிழ்து அம்மாவை நெருக்கினாள்.

‘பனையாலை ஏறி விழுந்தவன். மாடாக ஏறி மிதிக்கலாமோ?’ இதுவே சிந்தியாவின் கண்ணோட்டம். “இவ்வளவு நாளும் பொறுத்தனி இன்னும் கொஞ்ச நாள் பொறு..” அமிழ்துவிடம் சிந்தியா கூறினாள்.

சிங்கராயருக்கு சேடம் இழுக்கும் காலம் வரலாம் என மருத்துவர்கள் சொன்னதையும் சிந்தியா கவனத்தில் கொண்டாள்.

‘தேற வேண்டும், நோயிலிருந்து மீள வேண்டும். நடமாட வேண்டும்’ என்பது சிந்தியாவின் விருப்பம்.

‘உந்தாளை நம்பேலாது. அமிழ்துக்குக் காணியும் எழுத மாட்டார். சின்மயியை நாடாமல் இருக்கவும் மாட்டார்’. சிந்தியாவின் ஆழ் மனது எச்சரித்தது.

‘அட்டியலைச் சின்மயிக்குக் கொடுத்தது போலக் காப்புகளைக் கொடுத்தாலும் கொடுக்கக் கூடியவர் கணவர்’. சிந்தியாவின் எண்ண ஓட்டம்.

‘கண்கண்ட தெய்வமான கணவன் பிழைக்கவும் வேண்டும். தாலிப் பாக்கியம் தொடரவேண்டும். கண்டகண்ட சின்மயிகளோடு போகவும் கூடாது.

‘அமிழ்துவுக்கு என்னோடே அவ்வளவு பிடிப்பில்லை. அவள் என்ரை தொப்புள் கொடி. அவளுக்குத் தாற எண்ட சீதனக் காணியை எழுதிக் கொடுக்கவேண்டும்.’

சிங்கராயர் பட்டுத் தெளியட்டும்

அகத்தில் காதலோடும் புறத்தில் ஊடலோடும் சிந்தியா காத்திருக்கிறாள்.

**(சிங்கராயர்: சிங்களவர், அமிழ்து: தமிழர், சிந்தியா: இந்தியா, சின்மயி: சீனா, சரிக்கா: அமெரிக்கா, பிரியா: பிரித்தானியா, அட்டியல்: அம்பாந்தோட்டை, சீதனக் காணி : வட கிழக்கு)**

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

**06)** **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i) நான் .......................................... (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .................................... (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் ................................................... (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

*(3 புள்ளிகள்)*

**07)** **பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i) ஆற்றிலே போட்டாலும் .........................................................................

ii) ........................................................ குறுகுறுக்கும். *(2 புள்ளிகள்)*

**08)** **கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

i) பலா கன்று போல பயிர் : ..........................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : .................................................. *(2 புள்ளிகள்)*

**09)** **பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.**

i) தம்பி தண்ணீரை ............................... (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................ (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

*(2 புள்ளிகள்)*

**10)** **தனிச்சொல்லை எழுதுக.**


i) வீண் செலவு செய்பவன் : ..............................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : ..................................................... *(2 புள்ளிகள்)*

**11)** **கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) Bread : ............................ ii) Cloud : ............................ *(2 புள்ளிகள்)*

**12)** **தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.**

i)  ...................................

ii)  ...................................

*(2 புள்ளிகள்)*

**13)** **பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.**

i) do / like? / What / you : ............................................................................

ii) old / How / you? / are : ........................................................................... *(2 புள்ளிகள்)*

**14)** **பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) ரோஹல : .............................................................

ii) தொளஹ : ......................................................... *(02 புள்ளிகள்)*

**15)** **பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i) சோறு சாப்பிடுங்கள் : .........................................................................

ii) அங்கே பாருங்கள் : ......................................................................... *(02 புள்ளிகள்)*

❖ **விடை எழுதுக.**

**16)** 7 8 / 3 0 — இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

..............................................................

**17)** ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

..............................................................................

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| **06.** | 1) ஆவணி | 2) வாள் | 3) சுற்றுலா |
| **07.** | 1) அளவறிந்து போடு | 2) குற்றமுள்ள நெஞ்சு | |
| **08.** | 1) நாற்று | 2) தாள் | |
| **09.** | 1) மடமட | 2) தக தக | |
| **10.** | 1) ஊதாரி | 2) விமானி / வலவன் | |
| **11.** | 1) பாண் | 2) முகில் | |
| **12.** | 1) Star | 2) Table | |
| **13.** | 1) What do you like? | 2) How old are you? | |
| **14.** | 1) வைத்தியசாலை | 2) பன்னிரண்டு | |
| **15.** | 1) பத் கன்ன | 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன /அத்தன பலன்ன | |
| **16.** | 8 730 | **17.** 7 309 | |

---

கல்வி tv CHANNEL-1

**05.07.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**05.07.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# திருகோணமலை தனியார் பஸ் உரிமையாளர்கள் போராட்டம்!



திருமலை, ஜூலை. 05

திருகோணமலை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் தமக்கு சீராக எரி பொருள் வழங்கப்படுவதில்லை என தெரிவித்து திருகோணமலை பிரதான பஸ் தரிப்பிடத் துக்கு முன்பாக பஸ்களை நிறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாட்டில் ஏற்பட் டுள்ள எரி பொருள் தட்டுப்பாடு காரணமாக தனியார் பஸ்களுக்கான எரிபொருளை இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான டிப்போக்களில் இருந்து பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கையை அரசாங்கம் முன்னெடுத்திருந்த நிலையில் தமக்கு போதிய அளவிலான எரிபொருள் வழங்கப்படுவதில்லை என வலியுறுத்தி திருகோணமலை மத்திய பஸ் நிலையத்தின் நுழைவாயிலை பஸ்களைக் கொண்டு மறித்து தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

முன்னதாக நாளொன்றுக்கு 2500 லீற்றர் டீசல் வழங்கப்படுவதாக டிப்போ அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்ட போதிலும் தற்போது நாளொன்றுக்கு 750 லீற்றர் டீசல் வழங்கப்படுவதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

குறித்த டீசலை பெற்றுக் கொள்வதற்கு தாம் பல மணி நேரம் காத்திருக்கவேண்டி இருப்பதாகவும் குறிப்பாக தமது பஸ்கள் சேவையில் ஈடுபடும் நேரத்தில் தம்மை வரிசைகளில் காத்திருக்க வைத்து விட்டு இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதால் தாம் பெரிதும் பாதிக்கப்பட் டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (அ)

# இந்த அரசு இருக்கும்வரை அரபு நாடுகள் உதவமாட்டா!

## முன்னாள் கிழக்கு ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை. 05

**எத்தனை கோடிக்கணக்கான அமெரிக்க டொலர்களையும் இலங்கை அரசுக்கு அள்ளிக் கொடுக்க பல அரபு நாடுகள் தயாராக இருக்கின்றன. ஆனால் எமது நாட்டின் இப்போதுள்ள தலைமைத்துவங்களுக்கு உதவி செய்ய அவர்கள் ஆயத்தமாக இல்லை. ஒருவரின் பதவியை விட நாட்டில் வாழும் ஏறத்தாழ இரண்டு கோடி மக்களின் வாழ்க்கை மற்றும் எதிர் காலம் இங்கு கவனிக்கப்பட வேண்டியது என முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.எம்.ஏ. ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.**

காத்தான்குடியில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடனுக்கு மேல் கடன். கடனுக்கு வட்டி வேறு. இந்திய அரசு பெற்றோலை ரஷ்யாவிடமிருந்து கொள்வனவு செய்து 40 வீத இலா பத்தை வைத்து நமது நாட்டுக்கு தருகிறார்கள். உதாரணமாக 500 மில்லியன் டொலரை தந்துவிட்டு 1000- 2000 மில்லியன் டொலர் பெறுமதியான இலங்கையின் சொத்தை எழுதி வாங்கிக்



கொள்கிறார்கள். இந்த அரசாங்கம் ஆட்சியிலிருக்கும் ஒவ்வொரு நாளும் எமது நாடு பங்கரமான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இப்போது நாங்கள் அனுபவித்துக் கொண்டிருப்பதல்ல கஷ்டம். இனித்தான் நாம் அதிக கஷ்டங்களை அனுபவிக்க போகின்றோம். இன்னும் இரண்டு, மூன்று மாதங்களுக்கு இந்த அரசாங்கம் தொடர்ந்தால் விளைவு மிகமோசமாக இருக்கும். இந்த அரசாங்கம் நாட்டின்நிலையை கருத்தில்கொண்டு உடனடியாக பதவிகளை இராஜினாமா செய்து, இந்த நாட்டை கட்டியெழுப்பும் திறமையானவர்களிடம் நாட்டை கையளித்துவிட்டு ஒதுங்கவேண்டும்.

சர்வதேச நாணய நிதியம் எமது நாட்டின் ஆட்சியாளர்கள் அதிகாரத்திலிருந்து ஒதுங்கும் வரை இலங்கைக்கு உதவ முன்வராது-என்றார். (அ)

# இந்தியாவின் இரண்டாம் கட்ட நிவாரண உதவிகள் வழங்கல்

மட்டக்களப்பு, ஜூலை. 05

இந்திய நிவாரண உதவி திட்டத்தின்கீழ், கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவில் உள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களுக்கு இரண்டாம் கட்ட நிவாரணம் நேற்று வழங்கப்பட்டது.

இதன்போது 7250 குடும்பங்களுக்கு 10 கிலோ கிராம் வீதம் அரிசியும் 1300 பேருக்கு பால்மா பொதியும் வழங்கப்பட்டன. கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச்.எம். கனி தலைமையில், பிரதேச செயலகத்தில் வைத்து இந்த நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டன.

இதன்போது பிரதேச செயலாளர் கருத்து தெரிவிக்கையில், முக்கியமான காலகட்டத்தில் இந்த நிவாரணம் வழங்கப்படுகின்றது.

இதற்காக இந்திய அரசாங்கத்துக்கும் தமிழ்நாட்டு அரசாங்கத்துக்கும் நன்றிகளை தெரிவிக்கிறோம்.

முதலாம் கட்டத்தில் கிண்ணியாவுக்கு 4125 குடும்பங்களுக்கு அரிசியும், 300 குடும்பங்களுக்கு பால்மா பொதியும் வழங்கப்பட்டன. மூன்றாம் கட்டமாகவும் நிவாரணப்



பொதிகள் வர இருக்கின்றன. அவற்றையும் நாங்கள் பொருளாதார நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்த அளிப்பதற்கு காத்திருக்கின்றோம்.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரதேச செயலக ஊழியர்கள் தியாகங்களுக்கு மத்தியில் பணிபுரிந்து வரு கின்றனர். அவர்களுக்கும் இந்த நேரத்தில் நான் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்-என்றார். (அ)

# மருதமுனையில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயம்

மட்டக்களப்பு, ஜூலை. 05

பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனை பிரதான வீதியில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

தனிப்பட்ட வேலையை முடித்துக் கொண்டு வீட்டுக்கு சைக்கிளில் சென்ற ஒருவரை கல்முனையிலிருந்து -மட்டக்களப்புக்கு விரைந்து சென்ற தனியார் பஸ் மோதிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

குறித்த விபத்தில் காயமடைந்தவர் வீதியில் கிடப்பதை கவனிக்காமல் சென்ற தனியார் பஸ்ஸை அங்கிருந்த பொதுமக்கள் கூக்குரலிட்டு நிறுத்தினர்.

காயப்பட்டவரை வைத்திய



சாலைக்கு அனுப்பி அவருக்கு சிசிச்சையளிக்குமாறு பொதுமக்கள் பஸ் நடத்துநரை எச்சரித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக பெரியநீலாவணை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# இரு பிரான்ஸ் யுவதிகள் துஷ்பிரயோகம் 18 வயது இளைஞர் பொலிஸாரால் கைது!

திருமலை, ஜூலை. 05

திருகோணமலை - நிலாவெளிப் பகுதியில் வைத்து பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இரு யுவதிகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட குற்றச்சாட்டில் 18 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை - நிலாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேலூர் பகுதியில் வெளிநாட்டுப் பெண்கள் இருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் இளைஞரொருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நிலாவெளி- வேலூர் பகுதியில் உள்ள உல்லாச விடுதியில் தங்கியிருந்த 28 வயது மற்றும் 31 வயதுடைய பெண்கள் இருவர் கடற்கரையோரமாகச் சென்றுள்ளனர்.

இதன்போது உள் வீதியூடாக வந்த இளைஞன் இரு யுவதிகளையும் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக நிலாவெளி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் அதே பகுதியை சேர்ந்த 18 வயதுடைய இளைஞரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த இரண்டு பெண்களும் சட்ட வைத்திய நிபுணர் அறிக்கையை பெற்றுக் கொள்வதற்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கல்முனையில் கைது

அம்பாறை, ஜூலை. 05

மோட்டார் சைக்கிளில் 20 கிராம் ஐஸ் போதைப்பொருளை கடத்திய சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு மட்டக்களப்பு வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் இந்த கைது இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கல்முனை பகுதியை சேர்ந்த 30 வயதுடையவர்.

மட்டக்களப்பு ஓட்டமாவடி பகுதிக்கு குறித்த போதைப் பொருளை கடத்திச் செல்வதற்குத் தயாராக இருந்த வேளையில் கல்முனை கடற்கரைப்பள்ளி அருகில் உள்ள மைதானத்தில் வைத்து சந்தேகநபர் கைதானார்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடம் இருந்து இரு கைத் தொலைபேசிகள், பொதி செய்யப்பட்ட 20 கிராம் ஐஸ் போதைப் பொருள் மற்றும் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# டென்மார்க் தலைநகரின் வணிக வளாகத்தில் சூடு!

## 3 பேர் பலி! மூவர் படுகாயம்!!

கோபன்ஹேகன், ஜூலை. 05

டென்மார்க் தலைநகரில் உள்ள பரபரப்பான வணிக வளாகத்திற்குள் நேற்று ஞாயிற்றுக் கிழமை துப்பாக்கிதாரி ஒருவர் நுழைந்து நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் கொல்லப் பட் டனர். அத்து டன், மூன்று பேர் படுகாயமடைந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்திய 22 வயதான டெர்மார்க் வாசியான நபர் கைது செய்யப்பட்டார் என கோபன்ஹேகன் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சோரன் தோமஸ் சென் செய்தியாளர்களிடம் கூறினார்.

இந்தத் தாக்குதலுடன் வேறு எந்தவொரு குழுக்களும் தொடர்புபட்டுள்ளமைக்கான எந்த அறிகுறியும் இல்லை. இருப்பினும் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஸ்கன்டிநேவியாவின் மிகப் பெரிய வணிக வளாகங்களில் ஒன்றான டெனிஷ் தலைநகரின் புறநகரில் அமைந்துள்ள பீல்ட்ஸில் நேற்று முன் தினம் பிற்பகல் நடந்த துப்பாக்கிச் சூட்டுக்கான நோக்கத்தை விரைவில் அறிந்து கொள்ள முடியும் எனவும் சோரன் தோமஸ் சென் குறிப்பிட்டார்.

துப்பாக்கிச்சூடு சத்தம் கேட்டதும், சிலர் கடைகளுக்குள் ஒளிந்து கொண்டனர், மற்றவர்கள் பீதியடைந்து சிதறி ஓடியதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை, நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் உள்ள இரவு களியாட்ட விடுதி மற்றும் விடுதிக்கு அருகிலுள்ள தெருவில் அண்மையில் துப்பாக்கிச் சூட்டில் இரண்டு பேர் பலியானதுடன், 14 பேர் காய மடைந்தனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாக சந்தேகிக்கப் படும் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

ஸ்கன்டிநேவிய நாடுகளில் இவ்வாறான துப்பாக்கி வன்முறைகள் அரிதானவை. எனினும் கடந்த இரு வாரங்களில் இவ்வாறான துப்பாக்கி வன்முறைகள் இந்நாடுகளில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கிழக்கே ஒரு முழுப் பிராந்தியத்தை தன்வசமாக்கியது ரஷ்ய இராணுவம்!

## உக்ரைன் படை வாபஸ்! புடினின் போர் உத்திக்கு கிடைத்த முக்கிய வெற்றி



மொஸ்கோ, ஜூலை. 05

உக்ரைனின் கிழக்குப் பகுதியில் ரஷ்யாவோடு எல்லையைக் கொண்டிருந்த லுஹான்ஸ்க் பிராந்தியத்தை முழுமையாகக் கைப்பற்றிவிட்டதாக அதிபர் புடின் அறிவித்திருக்கிறார்.

சில வாரங்கள் நீடித்த தீவிர சண் டைக்குப் பிறகு அங்கு உக்ரைன் படைகள் தம் வசம் இருந்த ஒரேயொரு நகரத்தையும் கைவிட்டு வெளியேறியுள்ளன.

தனது துருப்புக்களைப் பாதுகாப்பதற்காக லிசிசான்ஸ்க் என்ற அந்த நகரிலிருந்து படைகளைத் தந்திரோபாயமாகத் திருப்பி அழைத்துள்ளதாக உக்ரைன் அதிபர் தெரிவித்திருக்கிறார். லிசிசான்ஸ்க் நகரம் பறிபோயிருப்பதை நம்பமுடியாதுள்ளது எனக் கூறியுள்ள அவர், அதனை மீளக் கைப்பற்றுவோம் என்று சூளுரைத்துள்ளார்.

130 நாட்களுக்கு மேல் நீடிக்கின்ற படையெடுப்பில் உக்ரைனின் பிராந்தியம் ஒன்றை ரஷ்யப் படைகள் முழுமையாகக் கைப்பற்றியிருப்பது இதுவே முதல் முறை என்பதால் இந்த வெற்றி மொஸ்கோவுக்குப் புதிய உத்வேகத்தைக் கொடுத்திருக்கிறது. தலைநகர் கீவ் உட்பட ஏனைய முக்கிய போர் முனைகளில் இருந்து தனது படைகளைத் திருப்பி அழைத்துவிட்டு முழுப் படைப் பலத்தையும் கிழக்கே குவித்து அங்கு சண்டையைத் தீவிர மாக்கிய புடினின் போர் உத்திக்கு"இது ஒரு பரிசு" என்று போரியல் நிபுணர்கள் சிலர் கருதுகின் றனர்.

உக்ரைனின் மிக முக்கிய கிழக்கு மாகாணமாகிய டொன்பாஸில் அடங்குகின்ற இரண்டு பிராந்தியங்களில் ஒன்று லுஹான்ஸ்க். இப்போது அது வெற்றி கொள்ளப்பட்டிருப்பது டொன்பாஸ் மீதான ரஷ்யாவின் அடுத்த நகர்வுகளுக்குப் பலம் சேர்த்திருக்கிறது. டொன்பாஸில் ரஷ்ய ஆதரவுடன் இயங்கும் பிரிவினை வாதக் கிளர்ச்சிப் படைகளோடு செச்சினியா நாட்டுக் கூலிப் படைகளும் இணைந்து உக்ரைன் இராணுவத்தை எதிர்த்து வரு கின்றன.

2014 இல் உக்ரைனிடம் இருந்து ஆக்கிரமித்த கிரிமியா குடாவுக்கும் டொன்பாஸ் பிராந்தியத்துக்கும் வழித் தொடர்பை ஏற்படுத்தி உக்ரைனின் கிழக்குப் பகுதியை முற்றாக ரஷ்யாவுடன் இணைப்பது புடினின் இலக்கு ஆகும். (அ)

# ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் வாகனத் தொடரணி மீது தாக்குதல்!

## இருவர் பலி, 20 பேர் காயம்!

காபூல், ஜூலை. 05

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் சென்ற வாகனம் மீது இன்று மர்ம நபர்கள் நடத்திய தாக்குதலில் இரண்டு தலிபான்கள் உயிரிழந்ததாகவும், தலிபான்கள் மற்றும் பொது மக்கள் 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



தலிபான் படைகளை ஏற்றிச் சென்ற வாகனத் தொடரணி மீது நேற்று திங்கட்கிழமை காலை ஆப்கானிஸ்தானின் மேற்கில் உள்ள ஹெராத் மாகாணத்தில் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஹார்ட் மாகாணத்தின் 4வது மாவட்டத்தில் தலிபான் படைகளை குறி வைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாக வும் அடையாளம் தெரியாத துப்பாக்கி தாரிகள் தலிபான் படைகளை ஏற்றிச் சென்ற வாகனத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் ஹெராத் மாகாண பொலிஸ் செய்தித் தொடர்பாளர் முகமது ஷா ரசூல் உறுதிப்படுத்தினார்.

இந்தத் தாக்குதலில் இரண்டு தலிபான் பாதுகாப்பு பணியாளர்கள் கொல்லப்பட்டதாகவும், 20க்கும் மேற்பட்ட வீரர்கள் மற்றும் பொது மக்கள் காயமடைந்ததாகவும் நேரில் கண்ட சாட்சிகள் சர்வதேச ஊடகங்களிடம் தெரிவித்துள்ளன.

எனினும் தாக்குதலில் தலிபான்களுக்கு உயிரிழப்பு ஏற்படவில்லை என்று செய்தித் தொடர்பாளர் கூறினார். மேலும், தலிபான் பாதுகாப்புப் படையினர் மீதான தாக்குதலின் போது தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# இத்தாலி அல்ப்ஸ் மலைத்தொடரில் பனிப்பாறை உடைந்து 6 பேர் பலி!

ரோம், ஜூலை, 05



இத்தாலி ஆல்ப்ஸ் மலைத்தொடரில் பனிப்பாறையின் பெரிய பகுதி உடைந்து விழுந்ததில் அங்கு மலையேற்றத்தில் ஈடுபட்டிருந்த குறைந்தது 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் 9 பேர் காயமடைந்தனர். 15 பேர் வரை காணாமல் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற மலைப் பகுதியில் தற்போது தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள் முடக்கி விடப்பட்டுள்ளன. இந்தப் பணியில் மோப்ப நாய்கள் மற்றும் குறைந்தது ஐந்து ஹெலிகொப்டர்கள் ஈடுபட்டுள்ளன.

எனினும் மேலும் பனிப்பாறைகள் உடைந்து விழக்கூடும் என்ற அச்சம் நிலவுவதால் மீட்புப் பணி ஞாயிற்றுக்கிழமை இரவு இடைநிறுத்தப்பட்டு நேற்று மீண்டும் தொடர்ந்து இடம்பெற்றது.

இதேவேளை, பனிப்பாறை உடைந்து விழுந்த பகுதிக்கு மலையேற்றம் மற்றும் சுற்றுலாப் பயண நோக்கில் சென்றவர்கள் யாரும் திரும்பத் தவறியிருந்தால் அது குறித்து அறிவிக்குமாறு அதிகாரிகள் கோரியுள்ளனர்.

மலையேற்றத்தில் ஈடுபட்டு திரும்பி வராதவர்களை கணக்கிடும் பணியில் ஒரு பகுதியாக அங்குள்ள கார்களின் இலக்கத் தகடுகளை சரிபார்க்கும் பணிகளில் மீட்புக் குழுவினர் ஒரு பகுதியினர் ஈடுபட்டுள்ளனர்.

ஐரோப்பாவில் மிகப்பெரிய மலைத் தொடர்களில் ஒன்று அல்ப்ஸ் மலைத் தொடராகும். இத்தாலி, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து உள்ளிட்ட 8 நாடுகளில் பரந்து விரிந்து காணப்படுகிறது.

சுற்றுலா தளமான இந்த மலைத் தொடரில் மலையேறுதல், பனிச்சறுக்கு உள்ளிட்ட சாகசங்களில் பலர் ஈடுபடுவார்கள். இத்தாலி நாட்டில் வழியாக செல்லும் இந்த மலைத்தொடரில், சுமார் 3300 மீற்றர் உயரத்தில் மர்மலாடா என்ற சிகரம் உள்ளது. புன்டா ரோக்கா எனற பகுதி வழியாக இந்த சிகரத்தை அடையலாம்.

இந்த பகுதியில் பலர் மலையேற்றத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இந்த நிலையில், புன்டா ரோக்கா பகுதிக்கு அருகில் பனிப்பாறை சரிந்து விழுந்தது. மலையேற்றத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் சிலர் அதில் சிக்கி அடித்து செல்லப்பட்டனர். (அ)

# எகிப்தில் கடலில் குளித்துக்கொண்டிருந்த இரண்டு பெண்கள் சுறா தாக்கி பலி!

கெய்ரோ, ஜூலை. 05

எகிப்தின் செங்கடலில் ஹூர் காடா நகருக்கு தெற்கே சுறா தாக்கியதில் இரண்டு பெண்கள் கொல்லப்பட்டதாக எகிப்திய சுற்றுச்சூழல் அமைச்சு தெரிவித்துள்ளது.

68 வயதான ஆஸ்திரியப் பெண் உயிரிழந்த சில மணிநேரங்களுக்கு பின்னர், சுறா தாக்குதலில் பலியான 40 வயதான ரோமானிய சுற்றுலாப் பயணியின் உடல் கண்டுபிடிக்கப்பட்டது.

இரண்டு தாக்குதல்களும் ஒருவருக்கொருவர் 600 மீற்றர் தொலைவில், சாஹ்ல் ஹஷீஷ் கடற்கரையில் இடம்பெற்றதாக ஆதாரங்கள் தெரிவிக்கின்றன.

சுறா தாக்குதல் இடம்பெற்ற சூழ்நிலை மற்றும் அவற்றின் பின்னணியில் உள்ள அறிவியல் காரணங்களை ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டுள் ளது என எகிப்திய சுற்றுச்சூழல் அமைச்சு ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலை அடுத்து சம்பவம் இடம்பெற்ற பகுதியில் கடற்கரைகள் மூடப்பட்டு சுற்றுலாப் பயணிகள் வர தடை செய்யப்பட்டுள்ளதாக செங்கடல் பிராந்திய ஆளுநர் மேஜர் ஜெனரல் அம்ர் ஹனாபி தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர் உள்ளூர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக செங்கடல் சுகாதார விவகாரங்களுக்கான பணிப்




பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.(அ)

ஈழநாடு





## விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் காலிறுதியில் சானியா இணை!

லண்டன், ஜூலை 05

சானியா மிர்சா இணை விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் காலிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் லண்டனில் நடக்கிறது. இதில், நேற்று நடந்த கலப்பு இரட்டையர் பிரிவு ஆட்டத்தில் (இந்தியா ) சானியா மிர்சா - மேட் பாவிக் (குரோஷியா ) இணை, இவான் டாடிக் (குரேஷியா) - லதிஷா சான் (சீனா) இணையுடன் மோதவிருந்தது.

இந்நிலையில், கடைசி கட்டத்தில் இவான் டாடிக், லதிஷா சான் இணை போட்டியிலிருந்து விலகியதால், சானியா மிர்சா, மேட் பாவிக் ஜோடி காலிறுதி சுற்றுக்கு முன்னேறியது. (ஐ)



## விம்பிள்டன் ரென்னிஸ் சிமோனா 4ஆவது சுற்றில்!

லண்டன், ஜூலை 05

ரென்னிஸ் உலகின் முன்னணி வீராங்கனையான சிமோனா ஹாலேப் உட்பட பல முன்னணி வீராங்கனைகள் நான்காவது சுற்றுக்கு முன்னேறினர்.

நேற்று முன்தினம் நடந்த மூன்றாவது சுற்றில் ருமேனியாவின் சிமோன ஹாலேப் 6-4, 6-1 என்ற கணக்கில் போலந்தின் மக்டலெனா பிரஸை வெற்றி பெற்றார்.

இதேபோன்று, ஸ்பெயினின் படோசா செக் குடியரசின் பெட்ரா குவிட்டோவை 7-5, 7-6 (7-4) என்ற செற் கணக்கில் வென்றார். (ஐ)



## இங்கிலாந்துடனான டெஸ்ட் புஜாரா மீண்டும் சாதனை!

பர்மிங்ஹாம், ஜூலை 05

இந்திய டெஸ்ட் அணியின் தற்போதைய தலைவர் ஜஸ்பிரித் பும்ரா பந்து வீச்சில் புதிய சாதனை படைத்துள்ளார்.

இந்திய பந்துவீச்சாளர் ஒருவர் இங்கிலாந்தில் விளையாடிய டெஸ்ட் தொடரில் அதிக விக்கெட்களை (21 விக்கெட்கள்) எடுத்தவர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

இந்த சாதனையை அவர் இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையேயான 5ஆவது டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்ஸில் எடுத்துள்ளார். இதனிடையே டெஸ்டில் ஒரே ஓவரில் அதிக ஓட்டங்களை எடுத்த சாதனையும் படைத்தது குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் அதிக விக்கெட்களை எடுத்த இந்திய பந்து வீச்சாளர்களில், ஜஸ்பிரித் பும்ரா -21 (2021-22), புவனேஷ்வர் குமார்- 19 (2014), சகீர் கான் -18 (2007), இஷாந்த் சர்மா -18 (2018), சுபாஷ் குப்தே -17 (1959)

# “வாத்தி கம்மிங்” பெடரரை விளித்த விம்பிள்டன் குழு!

லண்டன், ஜூலை 05

நட்சத்திர ரென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர், இங்கிலாந்து கழகங்களால் கொண்டாடப்பட்ட “சென்டர் கோர்ட்“டின் நூற்றாண்டு விழாவில் பங்கேற்றிருந்தார். அந்த விழாவுக்கு அவர் வருகை தரும் படத்தை “வாத்தி கம்மிங்“ என தலைப்பிட்டு தனது அதிகாரபூர்வ சமூக வலைத்தளப் பக்கத்தில் பகிர்ந்துள்ளது விம்பிள்டன்.

கிராண்ட்ஸ்லம் தொடர்களில் ஒன்று விம்பிள்டன். இங்கிலாந்து நாட்டில் ஆண்டுதோறும் இந்தத் தொடர் நடைபெற்று வருவது வழக்கம். கடந்த 1877 முதல் விம்பிள்டன் நடத்தப்பட்டு வருகிறது. இதில், 8 முறை ஒற்றையர் ஆடவர் பிரிவில் பட்டம் வென்றுள்ளார் சுவிற்சர்லாந்து நாட்டவரான ரோஜர் பெடரர். 40 வயதான அவர் 2003, 2004, 2005, 2006, 2007, 2009, 2012, 2017 ஆகிய ஆண்டுகளில் பட்டம் வென்றுள்ளார்.

அவர் நடப்பு தொடரில் பங்கேற்கவில்லை. வரும் செப்ரெம்பர் மாதமளவில் அவர் விளையாடக் களம் திரும்புவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அவர் சென்டர் கோர்ட்டின் நூற்றாண்டு விழாவில் பங்கேற்க வந்திருந்தார். அப்போது அவர் வருகை தந்த புகைப்படத்தை “வாத்தி கம்மிங்“ எனத் தலைப்பிட்டு தனது அதிகாரப்பூர்வ முகநூல் பக்கத்தில் பகிர்ந்துள்ளது விம்பிள்டன். இப்போது அது இணையவெளியில் கவனம் ஈர்த்து வருகிறது.

தமிழ் திரைத்துறையின் உச்ச நடிகர்களில் ஒருவரான விஜய் நடித்த மாஸ்டர் படத்தில் இடம்பெற்றிருந்த




பாடல்தான் “வாத்தி கம்மிங்“. கடந்த சில ஐ. பி. எல். தொடருக்கு முன்னர் வீரர்கள் இந்தப் பாட்டுக்கு நடனமாடி இருந்தனர். இப்போது விம்பிள்டன் வரை இந்த பாடல் சென்று சேர்ந்துள்ளது. இந்த பாடல் காணொலி யூ-ரியூப் தளத்தில் 37 கோடி பார்வைகளை கடந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## விம்பிள்டன் ரென்னிஸ் ஜொகோவிச் காலிறுதியில்!

லண்டன், ஜூலை 05

உலகின் முன்னணி வீரரான ஜொகோவிச் விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் நான்காவது சுற்று ஆட்டத்துக்கு முன்னேறியுள்ளார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடக்கிறது.

இதன், ஆண்கள் ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்று ஆட்டத்தில் உலகின் முன்னணி வீரரான சேர்பியாவின் நோவக் ஜொகோவிச், நெதர்லாந்தின் ரிஜ்தோவென்னுடன் மோதினார்.

இதில், 6-2, 4-6, 6-1, 6-2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்ற ஜொகோவிச் காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு சுற்றில் இத்தாலி வீரர் ஜானிக் சின்னர், ஸ்பெயின் வீரர் கார்லோஸ் அல்காரஸுடன் மோதினார். இதில் 6-1, 6-4, 7-6, 6-3 என்ற செற் கணக்கில் வென்று காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார் சின்னர்.

இன்று நடைபெறும் காலிறுதியில் ஜொகோவிச், சின்னரை எதிர்கொள்கிறார். (ஐ)



# இலங்கைப் பொருளாதாரம் மரண படுக்கையில் உள்ளது

## புகழ்பெற்ற பொருளாதார நிபுணர் கருத்து

கொழும்பு, ஜூலை 05

இலங்கையின் பொருளாதாரம் மரண படுக்கையில் இருப்பதாக உலக புகழ்பெற்ற பொருளாதார நிபுணரும் ஜோன் ஹோப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியருமான ஸ்டீவ் ஹேன்க் தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டரில் இட்டுள்ள பதிவில் அவர் இதனை கூறியுள்ளார்.

இலங்கையின் வருடாந்த பணவீக்கம்122 வீதம் வரை அதிகரித்துள்ளது. இந்த நிலைமை மேலும் மோசமான பக்கம் திரும்பியுள்ளதுடன் சர்வதேச நாணய நிதியம் கூட இலங்கைக்கு கடன் வழங்க மறுத்துள்ளது.



இலங்கை, சர்வதேச நாணய நிதியத்தின் 16 நிகழ்ச்சித் திட்டங்களில் சம்பந்தப்பட்டபோதிலும் அதில் ஒன்றில் கூட இலங்கை வெற்றி பெறவில்லை எனவும் ஸ்டீவ் ஹேன்க் கூறியுள்ளார்.

இதனிடையே கடந்த ஜூன் மாதத்தின் 30 நாட்களில் அதிகளவான பணவீக்க வீதம் சிம்பாப்வே நாட்டில் பதிவாகியதுடன் குறைந்த மட்டத்திலான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

அதிகூடிய பணவீக்க வேகம் கொண்ட நாடாக இலங்கை முன்நோக்கி வந்துள்ளதுடன் இலங்கையின் பணவீக்கம் 117 வீதமாக பதிவாகியுள்ளது எனவும் ஸ்டீவ் ஹேன்க் கூறியுள்ளார். (அ)

# எதிர்வரும் வாரங்களில் அரசில் பெரும் மாற்றம்?

கொழும்பு, ஜூலை 05

எதிர்வரும் வாரங்களில் அரசாங்கத்தில் பெரும் மாற்றங்கள் ஏற்படவுள்ளதாகவும், புதிய அரசாங்கத்தை அமைக்கும் வகையில் பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் அரசியல் உயர்மட்டத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கவேண்டும் என்றும், அதனூடாகவே சர்வதேசம் மற்றும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை பெற முடியும் என்றும் மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கோரிக்கைகளை விடுத்து வரும் நிலையில் அது தொடர்பில் ஜனாதிபதி ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை உத்தியோகபூர்வமாக அரசாங்கத்தினால் நாடு முடக்கப்படாவிட்டாலும், நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி நிலைமையால் இந்த வாரம் முதல் நாடு முற்றாக முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (அ)

# தேசிய அனர்த்த நிலையை பிரகடனம் செய்ய கோரிக்கை

கொழும்பு, ஜூலை 05

தேசிய அனர்த்த நிலையை பிரகடனம் செய்யுமாறு இலங்கை நிர்வாக சேவைச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்கு உரிய அதிகாரி ஒருவரை நியமிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நிலைமைகளை முகாமைத்துவம் செய்வதில் சிக்கல் நாட்டில் தற்பொழுது நிலவி வரும் நிலைமைகளை சாதாரண முகாமைத்துவம் செய்வதில் சிக்கல் நிலை காணப்படுவதாக இலங்கை நிர்வாக சேவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்தியாவசிய சேவைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக உயிர் அச்சுறுத்தல்களை கருத்திற் கொள்ளாது பணியாற்றி வரும் அரசாங்க ஊழியர்கள் எதிர்நோக்கும் நெருக்குதல்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்யாமை குறித்து எதிர்ப்பை வெளியிடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகள் அத்துடன், மாத்தறை பிரதேச செயலாளருக்கு நெருக்கடி ஏற்படுத்திய மாத்தறை வைத்தியசாலையின் பணியாளர்களுக்கு மற்றும் வடமத்திய மாகாண ஆளுநரின் செயலாளரது பணிகளுக்கு இடையூறு விளைவித்த குருநாகல் மாநகர முதல்வர் ஆகியோருக்கு எதிராக இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உரிய நடவ டிக்கை எடுக்கப்படாவிட்டால் கடுமையான தொழிற்சங்க நட வடிக்கைகள் எடுக்கப்படநேரி டும் என இலங்கை நிர்வாக சேவை சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# வாடகை அடிப்படையில் 100 பஸ்கள் பெண் நடத்துநர்கள் இனி சேவையில்

கொழும்பு, ஜூலை 05

கொழும்பு மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களின் நலன் கருதி, இந்திய அசோக் லேலண்ட் நிறுவனத்திடம் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு, பயன்படுத்தாமல் உள்ள 100 பஸ்களை வாடகை அடிப்படையில் பெற்று பயன்படுத்த அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

போக்குவரத்து துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன இதனை தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பாடசாலை வாகனங்களின் கட்டணங்கள் அதிகரித்துள்ளதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் இன்று நாடாளுமன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு பயன்படுத்தப்படும் பஸ்கள் பின்னர், இலங்கை போக்குவரத்து சபையுடன் இணைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த பஸ்களில் பயணிக்கும் மாணவர்களின் பாதுகாப்பு கருதி, புதிதாக சாரதிகளைப் பணிகளில் சேர்த்துக்கொள்ளும் அதேநேரம் பெண் நடத்துநர்கள் பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இவர்களுக்கு பகல் போசனத்துக்கும் நிதியொதுக்கீடு செய்யப்படவுள்ளது. முதலில் மாதிரி திட்டமாக மேற்கொள்ளப்படவுள்ள இந்த திட்டம், வரும் காலங்களில் காலி, மாத்தறை போன்ற இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என்று பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் பயணிகளின் போக்குவரத்துக்காக 500 பஸ்களை அடுத்து வரும் இடைக்கால பாதீட்டின் ஊடாக இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்ய எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஊடகவியலாளர்கள் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக பாரிய பிரச்னைகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

எனினும் பிரதேச ஊடகவியலாளர்களுக்கு எதிர்வரும் 10ஆம் திகதி வரை எரிபொருட்களை விநியோகிக்கும் இயலுமை இல்லை என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் ஊடக நிறுவனங்கள் செயல்படுவதற்கு தேவையான எரிபொருட்களை, அரச போக்குவரத்துச் சபையில் இருந்து பெற்றுக்கொள்ள வழியேற்படுத்தப்பட்டுள்ளது என்று அமைச்சர் பந்துல குண வர்த்தன தெரிவித்துள்ளார். (அ)


# மரண அறிவித்தல்

தோற்றம்
02 - 04 - 1951



மறைவு
04 - 07 - 2022

## செல்லையா சங்கரலிங்கம்

வேலணை வடக்கு 5ஆம் வட்டாரம் சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும் மண்கும்பானை வசிப்பிடமாகவும் தற்போது சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சங்கரலிங்கம் அவர்கள் நேற்று (04.07.2022) திங்கட்கிழமை அதிகாலை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா (நயினாதீவு 5ஆம் வட்டாரம்) ராஜலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் (மண்கும்பான்) மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும், ரேணுகாதேவியின் (லண்டன்) அன்புக் கணவரும், தாட்சாயினி (லண்டன்), சங்கீதா (லண்டன்), சிவதர்சினி (லண்டன்), லோஜிந்திரா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற திருமதி குழந்தைவேலு - பூம்பாவை மற்றும் குலவீரசிங்கம் (லண்டன்), மகாதேவன் (யாழ்ப்பாணம்), முருகவேள் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு (அம்பலாங்கொட வர்த்தகர் K.K.S றான்ஸ்போட்), மகாலட்சுமி (லண்டன்) மற்றும் நாகராஜேஸ்வரி (தங்கராணி), சசிகலா, சிவபாதசுந்தரம் (லண்டன்), மலர்மணிதேவி, இராசலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளிற்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

72, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (CS 45468)(3/6)

076 210 4345
077 816 6394

தகவல் : குடும்பத்தினர்

## தண்ணீர்...

குழந்தை வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தது. அப்போது, 20 லீற்றர் கொள்வனவுடைய தண்ணீர் வாளிக்குள் இருந்த கரண்டியை குழந்தை எடுக்க முற்பட்டபோது தலைகீழாக விழுந்து தண்ணீரில் மூழ்கியது. இதனை அவதானித்த வீட்டார் குழந்தையை மீட்டு உடனடியாக மூளாய் மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். எனினும், சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## விக்னேஸ்வரன்...

க. வி. விக்னேஸ்வரன் மட்டுமே பங்கேற்றார்.

இதேபோன்று, சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன எம்.பியும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றார்.

இந்தக் கூட்டத்தில் சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பிலும் அரசமைப்பு மறுசீரமைப்பு தொடர்பிலும் பேச்சுக்கள் இடம்பெற்றன என்று நம்பகமாக அறியவருகின்றது.

இந்தக் கூட்டத்தில், எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து இயங்கும் மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், பி. திகாம்பரம் மற்றும் சரத் பொன்சேகா போன்றவர்களும் சிரேஷ்ட ஊடகவியலாளர் விக்டர் ஐவன், ஜனரஞ்சன, காமினி வியங்கொட, ரொஹான் சமரஜீவ உள்ளிட்ட சமூக செயல்பாட்டாளர்களும் பங்கேற்றனர்.

எனினும், சர்வகட்சி அரசாங்கத்தில் விக்னேஸ்வரன் பங்கேற்பாரா என்பது தொடர்பில் அவர் தரப்பு கருத்துக்களை உறுதிப்படுத்த முயன்றபோதும், அவர்கள் தரப்பிலிருந்து எதுவித பதிலும் அளிக்கவில்லை. (ஐ-சி)

## இலங்கையை...

74 ஆண்டுகள் இந்த நாட்டை ஆண்டவர்கள் மக்களை தம்முடைய வாக்குகளுக்காக பாவித்தார்கள். ஆனால் இந்த நாட்டிலிருந்த வளத்தை எல்லாம் சுரண்டிவிட்டார்கள். ஒரு விதமாக கடைசியில் மிகப் பாரதூரமான சுரண்டல்களுடன் நாடு பிச்சை எடுக்கின்ற நிலை வந்துவிட்டது.

இந்து சமுத்திரத்தின் முத்து என்று சொல்லப்பட்ட இந்த நாடு இன்று பிச்சை எடுக்கின்ற நாடாக மாறி உள்ளது. இதற்கு காரணமான அனைவருமே பதில் சொல்ல வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

ஏனென்றால் மக்களை இந்த நாட்டின் குடிமக்களாக பார்க்கவில்லை. ஆனால் தமது வாக்குக்காக பாவித்துள்ளார்கள். எங்கள் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு வழிமுறைகள் உள்ளன. அவற்றைச் செய்யாமல் மக்களை வாக்குகளுக்காக பாவித்துள்ளார்கள்.

மக்களை ஏமாற்றி வாக்கைப் பெற்றிருக்கின்றார்கள். இன்று நாடு இவ்வாறு படுகுழியில் போய் உள்ளது

அண்மையில் சர்வதேச நாணய நிதியம் பல கேள்விகளை கேட்க இருந்தது. முன்னாள் பிரதமரிடம் 37 கேள்விகள் அவர்களால் கேட்கப்பட இருந்தன. ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பில் அவர்கள் கேட்க இருந்தனர். ஆனால் அவர் வைத்தியசாலையில் அனுமதி ஆகிவிட்டார். அதனால் அவர்கள் கேட்கவேண்டிய கேள்விகளைக் கேட்காது சென்றுவிட்டார்கள்.

எந்த நாடும் எமக்கு உதவி செய்யத் தயாராக இருக்கின்றார்கள். ஆனால் இந்த மோசடி ஊழல் நிறைந்த இந்த நாட்டு அரசாங்கத்தை நம்பி எந்த நாடும் நமக்கு உதவுவதற்கு தயாராக இல்லை.

அதனை முதலில் நிவர்த்தி செய்தால் மாத்திரமே எமக்கு ஏனைய நாடுகளின் உதவி கிடைக்கும். ஆனால் அதற்கு பொறுப்பானவர்கள் ஓடி ஒளிந்துவிட்டார்கள். இந்த நாட்டின் தற்போதைய ஆட்சியாளர்களின் பெருந்தன்மையால் இந்த நாடு ஒரு பிச்சைக்கார நாடாக மாறிவிட்டது - என்றார். (அ-03)

## ரயிலுடன்...

விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் உடனடியாக மீட்கப்பட்டு செட்டிக்குளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதிலும், அங்கு அவர் உயிரிழந்தார்.

இதில், காந்திநகர் பகுதியை சேர்ந்த ருக்சன் வயது 33 என்பவரே உயிரிழந்தார். (ஐ)

## உலக...

இதில், வவுனியாவை சேர்ந்த கந்தசாமி டிலக்சினியும் தங்கப் பதக் கத்தை வென்றார். இவர் சப்ரகமுவ பல்கலைக் கழக விளையாட்டு விஞ்ஞான மற்றும் முகாமைத்துவ கற்கை நெறி அலகு மாணவி என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சர்வகட்சி...

சபாநாயகர் அறிவிப்பு, பொதுமனுத் தாக்கல் உட்பட ஆரம்பகட்ட சபை நடவடிக் கைகள் முடிவடைந்த பின்னர் ஒழுங்குப் பிரச்னையொன்றை எழுப்பிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ எம்.பி.,

” இந்த அரசு மீது உள்நாட்டில் மட்டுமல்ல சர்வதேசத்திலும் நம்பிக்கை இல்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்கள் ஆணை இல்லை. அவர் தேசியப் பட்டியலில் சபைக்கு வந்தவர். மக்களின் பிரச்னைகள் குறித்து உரிய கவனம் செலுத்தப்படுவதாகத் தெரியவில்லை. பிரச்னைகளும், வரிசைகளும் நீள்கின்றன. எனவே, அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய சர்வகட்சி அரசு அமைக்கப்பட வேண்டும்” - என்று வலியுறுத் தினார்.

அதன்பின்னர் எழுந்த எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி., விமலின் கருத்தை வரவேற்றார். மகாநாயக்க தேரர்கள் விடுத்துள்ள கோரிக்கையின் பிரகாரம் சர்வகட்சி அரசு அமைய வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

எதிரணியின் மேலும் சில உறுப்பினர்களும் சர்வகட்சி அரசுக்குச் சார்பாகக் கருத்து வெளியிட்டனர்.

சர்வகட்சி அரசொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குப் பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் நேற்றுமுன்தினம் 10 அம்சங்களை முன்வைத்து கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## கரும்புலிகள்...

நிகழ்வுகளில் பங்கேற்க வேண்டாம் என்று அந்தக் கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், எதிர்வரும் காலங்களில் பிரதேச அரசியல்வாதிகளின் வீடுகள்மீதும் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்ற அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார். அத்துடன், இந்தத் தகவலில் உண்மையிருக்கிறதா என்றும் நளின் பண்டார கேள்வி எழுப்பினார்.

அவரின் கேள்விக்கு பதிலளித்த பிரதி சபாநாயகர், “இது விடயத்தில் பாதுகாப்பு தரப்பு உரிய நடவடிக்கை எடுக்கும்” என்று கூறினார்.

இதேவேளை, இந்தத் தகவல்கள் எப்படி, எங்கிருந்து பெறப்பட்டன என்பதையும், அப்படித் தாக்குதல் நடத்த வாய்ப்பு உள்ளதா என்பதையும் அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸநாயக்க கோரியுள்ளார்.

தற்போது நாடளாவிய ரீதியில் இடம்பெற்றுவரும் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களையும், உணர் வெழுச்சிகளையும் நசுக்கவே இவ்வாறான செய்திகள் பகிரப்படுகின்றன என்று தாம் சந்தேகிப்பதாகவும் அவர் கூறினார்.

(இது தொடர்பான மற்றொரு செய்தி பக்கம் 6இல்)

# மூன்று துறைகள் மட்டுமே அத்தியாவசிய சேவைகள்!

## விசேட வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஜூலை 05

மின்சாரம் வழங்கல், எரிபொருள் விநியோகம், மருத்துவ சேவை ஆகிய மூன்று துறைகள் மட்டுமே எரிபொருள் விநியோகத்துக்கான அத்தியாவசிய சேவைகள் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று சிறப்பு வர்த்தமானியை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், இந்த சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு மின்சாரம் வழங்கல் தொடர்பான அனைத்து சேவைகளும் - எரிபொருள் வழங்கல் அல்லது விநியோகம் - மருத்துவமனைகள், முதியோர் இல்லங்கள், மருந்தகங்கள், நோயாளிகளின் பராமரிப்பு, வரவேற்பு, பராமரிப்பு, உணவு மற்றும் சிகிச்சை தொடர்பாக தேவைப்படும் சேவைகள் மற்றும் பிற ஒத்த நிறுவனங்கள், வேலை அல்லது உழைப்பு அத்தியாவசிய சேவைகளுக்குள் அடங்குகின்றன. (ஐ)

# அனைத்துக் கட்சிகளும் இணையாவிடின் நாசம்!

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 05

கடந்த 3 ஆண்டுகளில் இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் மற்றவர்கள் சொல்வதை காதில் வாங்காமல், தாங்கள் மாத்திரம்தான் சரி என்று எண்ணிச் செயல்பட்டமையால் நாடு தற்போது பெரும் பாதாளத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. இதிலிருந்து மீள்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மறுசீரமைப்புக்குச் செல்ல வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சர்வாதிகாரம் இன்றி அனைவரின் கருத்துக்களுக்கும் செவிசாய்க்கும் சமூக சீர்திருத்தத்தின் மூலம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். அதற்காக முற்போக்குக் கட்சிகளின் முன்மொழிவுகளையும் யோசனைகளையும் செவிமடுப்பதாகக் கூறிய எதிர்க்கட்சித் தலைவர், பன்முகப்படுத்தப்பட்ட யோசனைகளை ஒன்றிணைக்கக்கூடிய பொதுவான தேசிய நிகழ்ச்சி நிரலின் மூலம் இறுதியில் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதே எதிர்க்கட்சியின் நோக்கம். இந்த நிகழ்ச்சி நிரலின் ஊடாக நாட்டு மக்கள் இழந்த மூச்சை மீண்டும் வழங்க முடியும்.

பெரும் வீழ்ச்சியடைந்துள்ள நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ”தேசிய மறுசீரமைப்பு மற்றும் அடுத்தகட்ட பயணம்” என்ற வேலைத்திட்டத்தின் கூட்டம் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம் பெற்றது. இதிலேயே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

# மட்டக்களப்பு ஐ.ஓ.சி நிலையத்தில் துரிதமான பெற்றோல் விநியோகம்

மட்டக்களப்பு, ஜூலை 05

மட்டக்களப்பு நகரிலுள்ள லங்கா ஐ.ஓ.சி.எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் கடுமையான நோயாளர்களுக்கும் பெற்றோல் வழங் கப்படுவதாக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் எம்.செல்வராசா தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் எரிபொருளுக்கு கடுமையான தட் டுப்பாடு நிலவுகின்ற போதிலும் மட்டக்களப்பு லங்கா ஐ.ஓ.சீ எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எவ்வித தடைக ளுமின்றி எரிபொருள் விநியோகம் சீரான முறையில் நடைபெற்று வருகின்றது.

இராணுவத்தினர் பொலிஸார் மற்றும் ஊடகவியலாளர்கள் முன்னிலையில், எரிபொருள் நிரப்பு நிலைய அதிபர் எம்.செல்வராசாவின் வழிநடத்திலில் மிகவும் நேர்த்தியாக நேற்று காலை முதல் பெற்றோல் விநியோகம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## எதிர்பாராத...

விக்கிரமசிங்க தனது பதவியை விட்டு விலகலாம் என்றும் கூறப்படுகின் றது. எனினும், பிரதமர் அலுவலக வட்டாரங்கள் எவையும் இந்தத் தகவலை உறுதி செய்யவில்லை.

எது எப்படி இருப்பினும், பிரதமர் பதவியிலிருந்து விலகினால், இது இலங்கை அரசியல் வரலாற்றின் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும். ஏனெனில், அரசுக்கு எதிரான போராட்டங்களை தொடர்ந்து மே 9ஆம் திகதி பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பதவியிலிருந்து விலகியிருந்தார். இதைத் தொடர்ந்து கடந்த ஜூன் 9ஆம் நாள் முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தமது பாராளுமன்ற உறுப்புரிமையைத் துறந்தார் என்பவை நினைவில் கொள்ளத்தக்கது.

இந்நிலையில்,நெருங்கி வரும் ஜூலை 9ஆம் திகதி என்ன மாற்றம் நிகழும் என்று பெரும் எதிர்ப்பு பல தரப்பினர் மத்தியிலும் உள்ளது. (ஐ - சி)

## யாழ்.நகரில்...

டோக்கன் முறைமை இல்லை என்பதால் வரிசை ஒழுங்கிலேயே எரிபொருள் வழங்கப்படும். 70வீத பெற்றோல் பொதுமக்களுக்கும் 30 வீத பெற்றோல் அரச அத்தியாவசிய ஊழியர்களுக்கும் வழங்கப்படும்.

இந்த முடிவு நேற்று மாலை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்டது. (ஐ)

## மக்கள்...

கூரும் வகையில் 5 (இன்று) அல்லது 6 (நாளை) பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்படலாம் என்று உறுதிப்படுத்தப்படாத புலனாய்வு தகவல்களை மேற்கோள்காட்டி பொலிஸ் மா அதிபரின் கடிதம் வெளியிடப்பட்டுள்ளது.

எனினும், இவ்வாறான தாக்குதல் ஒன்று நடத்தப்படுவதற்கான களநிலைமைகள் எதுவும் உறுதிப்படுத்தப்படவில்லை. பொது மக்களின் பாதுகாப்புக்கு அரசாங்கம் முன்னுரிமையளிப்பதன் காரணமாக புலனாய்வு தரப்பினருக்கு கிடைத்த இந்த தகவல் குறித்து, விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்படும். இந்த விடயம் குறித்த மக்கள் அச்சமடைய தேவையில்லை - என்றுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu




# மரண அறிவித்தல்

தோற்றம்
06 - 05 - 1935



மறைவு
02 - 07 - 2022

## திருமதி
## அன்னநாயகி தர்மலிங்கம்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், அவுஸ்திரேலியா Canberra ஐ வதிவிடமாகவும் கொண்ட அன்னநாயகி தர்மலிங்கம் 02-07-2022 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான செல்லையா – அம்மணி அம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை உடையார் – அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற கைலாசபிள்ளை தர்மலிங்கம்(வவுனியா) அவர்களின் அன்பு மனைவியும்,வசந்தி (Toronto, கனடா), பாமினி ( Canberra, அவுஸ்திரேலியா ) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை(வவுனியா), மதியாபரணம் (Toronto, கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஶ்ரீஸ்கந்தராஜா (Toronto, கனடா), ஶ்ரீதரன (Canberra, அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கேசலட்சுமி, காசித்தம்பி, இராமநாதன், சிவபாக்கியம், நவரட்ணம், பஞ்சாட்சரம் மற்றும் சரஸ்வதி, சோமசேகரம், கனகரட்ணம், புவனேஸ்வரி, தம்பிராசா, மகேஸ்வரி, இரத்தினதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும்,வைத்தியநாதன் (கொழும்பு) அவர்களின் சிறிய தாயாரும்,சரண்யா, வட்சன், கௌதம், மொனிஸா, கீரன் ஆகியோரின் ஆசைப் பேத்தியும் ஆவார்.

*கிரியை :*
Thursday, 07 Jul 2022 8:30 AM - 9:00 AM
Norwood Park Crematorium 65 Sandford St, Mitchell ACT 2911, Australia.

*பார்வைக்கு :*
Thursday, 07 Jul 2022 9:00 AM - 9:45 AM
Norwood Park Crematorium 65 Sandford St, Mitchell ACT 2911, Australia,

*தகனம்*
Thursday, 07 Jul 2022 9:45 AM
Norwood Park Crematorium 65 Sandford St, Mitchell ACT 2911, Australia.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :

**வசந்தி - மகள்**
**Mobile : +14167162297**
**தாமோ ஶ்ரீதரன் - மருமகன்**
**Mobile : +61404523849**
**மதியாபரணம் - சகோதரன்**
**Mobile : +14168796301**
**வைத்தியநாதன் - மகன்**
**Mobile : +94772300479**

தகவல்:
**குடும்பத்தினர்**

# நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை தோல்வி

## சபையில் கூறினார் லக்ஷ்மன் கிரியெல்ல

கொழும்பு, ஜூலை 05

இலங்கை அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்துடன் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. எனவே இது தொடர்பில் அரசாங்கம் உண்மை நிலைமையை வெளிப்படுத்த வேண்டும் என எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று பாராளுமன்றில் கேட்டுக்கொண்டார்.



இதற்கு பதிலளித்த அமைச்சர் பந்துல குணவர்த்தன, ஜனாதிபதி, பிரதமர் மற்றும் மத்திய வங்கியின் அதிகாரிகள் ஆகியோர், இலங்கையின் நிதி நெருக்கடிகளை வெற்றிக் கொள்ளும் வகையில் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாக குறிப்பிட்டார்.

இந்தநிலையில் இது தொடர்பில், நாளை (இன்று) பாராளுமன்றில் தெளிவுப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# ரஷ்யா கூறிய விடயங்கள் அரசால் செய்யக்கூடியவை

## சபையில் கூறினார் மைத்திரி

கொழும்பு, ஜூலை 05

ரஷ்ய அரசாங்கம் தனக்கு அனுப்பிய கடிதத்தில் கூறியிருந்த விடயங்கள் செய்யக்கூடியவை எனவும் அரசாங்கம் அவற்றை செய்வற்கான முனைப்புகளை மேற்கொள்ளவில்லை என்றால் வருத்தப்படுவதாகவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ரஷ்ய விமானம் சம்பந்தமாக ஏற்பட்ட நெருக்கடிக்கு பின்னர், நான் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்குஅனுப்பிய கடிதத்திற்கு மூன்று நாட்களுக்குள் பதில் கடிதம் கிடைத்தது.

எனக்கு கிடைத்த பதில் கடிதத்தை நான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்தேன்.

பதில் கடிதத்தில் கூறப்பட்டிருந்தவற்றை செய்தால், மீண்டும் விமானப் பயணங்கள் மாத்திரமல்லாது வர்த்தக நடவடிக்கைகளையும் ஆரம்பிக்க சந்தர்ப்பம் கிடைக்கும்.



விமானம் சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்னையில் இலங்கை செயல்பட்ட விதம் தவறானது எனவும் நீதிமன்றத்திற்கு செல்லாது ராஜதந்திர ரீதியில் பிரச்னையை தீர்த்துக்கொண்டிருக்கலாம் எனவும் ரஷ்யாவில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் கூறப்பட்டிருந்தது.

எதிர்காலத்தில் இப்படியான சம்பவங்கள் நடக்காது என்பதற்கு தெளிவாக உறுதிமொழியை வழங்குமாறு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

உரத்தையோ எரிபொருளையோ பெற்றுக்கொள்ள ரஷ்ய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த தேவையில்லை. சம்பந்தப்பட்ட ரஷ்ய நிறுவனங்கள் மற்றும் இலங்கை நிறுவனங்களின் இணக்கப்பாட்டுடன் அந்த கொடுக்கல், வாங்கலை செய்ய முடியும் எனவும் கடிதத்தில் கூறப்பட்டிருந்தது- என்றார்.

இதற்கு பதிலளித்த கல்விய மைச்சர் சுசில் பிரேமஜயந்த, எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு மாத்திரமல்ல நல்லெண்ணத்தை அதிகரிப்பதற்காகவும் தான் ரஷ்யாவுக்கு பயணம் மேற்கொள்ள உள்ளதாக கூறினார்.

ரஷ்ய அரசாங்கத்திற்கு வழங்க வேண்டிய கடிதத்தை ரஷ்ய மொழியில் மொழி பெயர்த்து வரு வதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (அ)

# கோட்டா, ரணில் ஆட்சியால்தான் மாணவரின் கல்வியில் பாதிப்பு!

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 05

கோட்டாபய, ரணில் ஆட்சியால் தான் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாடசாலைகள் தொடர்ச்சியாக மூடப்பட்டால் மாணவர்களின் கல்வி நடவடிக்கை என்னாகும்?

2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த.உயர்தர பரீட்சை 2022 ஆம் ஆண்டு பெப்ரவரியில் இடம்பெற்றது.

இதன் செயன்முறை பரீட்சைகள் தற்போது 44 பரீட்சை நிலையங்களில் நடைபெறுகின்றது. இருப்பினும் 33 பரீட்சை நிலையங்களுக்கு ஆசிரியர்களால் கடமைக்கு சமூகமளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை மாணவர்கள் பரீட்சைக்கு சமூகமளிக்கும் அளவும் குறைவாக உள்ளது.

க.பொ.த சாதாரண தர பரீட்சையின் வினாத்தாள்கள் திருத்தும் இரண்டாம் கட்ட நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதனால் பெறுபேறுகளை வெளியிட தாமதமாகின்றது. கல்வி நடவடிக்கைக்காக வெளிநாடுகளுக்கு செல்லும் மாணவர்களின் கல்வி நடவடிக்கையும் தடைப்பட்டுள்ளது-என்றார். (அ)

# 7,000 பேரின் உயிருக்கு காத்திருக்கும் ஆபத்து!

கொழும்பு, ஜூலை 05

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் அனைத்து துறைகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் நாட்டில் சுமார் 7,000 பேர் இருதய சத்திர சிகிச்சைக்காக காத்திருப்பதாக அரச தரப்பு சார்பில் பாராளுமன்றில் நேற்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் சுமார் 4000 பேர்,கண்டியில் 2000 பேர்,யாழ்ப்பாணத்தில் 1000 பேர் நாட்டில் என சுமார் 7000 ஆயிரம் பேர் இருதய சத்திர சிகிச்சைக்காக காத்திருக்கின்றனர். இவர்களுக்கான சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் மருத்துவர்கள் உட்பட மருந்து, உபகரணங்களுக்கான பற்றாக்குறை காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
06.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து - உளவள துணையாளர் யாழ் பாவாணன்



7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் -
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி



10.00 மணி : BLACK AND WHITE

DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

ஓம் ரிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு